விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 04 செவ்வாய்க்கிழமை (18.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 150

# மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்று

## சுகாதார நடைமுறைகளுடன் நினைவேந்தலுக்கு நீதிமன்றம் அனுமதி



(முல்லைத்தீவு)
தமிழினப் படுகொலை நாளான மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 12ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்படவுள்ளது.
சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உயிரிழந்த உறவுகளை நினைவுகூர முடியும் என முல்லைத்தீவு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.
(03ஆம் பக்கம் பார்க்க)



(கோப்புப் படங்கள்)

## மீண்டும் நாடு முழுவதும் பயணக் கட்டுப்பாடு

மே 21 இரவு முதல் 25 அதிகாலை வரை
மே 25 இரவு முதல் 28 அதிகாலை வரை

(கொழும்பு)
நாடு முழுவதும் மீண்டும் முழுநேர பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்படவுள்ளதாக இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர 19

## நீதிமன்றம் அனுமதி அளித்த பின்னரும் நினைவிடத்துக்கு செல்ல பொலிஸார் தடை

இராணுவமும் கண்காணிப்பு



(முல்லைத்தீவு)
நீதிமன்றம் அனுமதி வழங்கிய பின்னர் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்குச் சென்ற சட்டத்தரணிகள் மற்றும் அரசியல் கட்சியி 20




## புதுக்குடியிருப்பில் கொரோனா கொத்தணி

# 322 பேருக்கு ஒரே நாளில் தொற்று உறுதி

புதுக்குடியிருப்பு, முள்ளியவளை பகுதிகள் முடக்கம்

*(முல்லைத்தீவு)*
முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 322 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து புதுக்குடியிருப்பு, முள்ளியவளை பகுதிகள் முடக்கப்பட்டுள்ளது.
(02ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை ஆசிரியர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)
பாடசாலை ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி வழங்குவது குறித்து கவனம் 03

## யாழ்.பல்கலையில் நினைவேந்தலை தடுக்க

பொலிஸ், இராணுவம் கண்காணிப்பு

(யாழ்ப்பாணம்)
இன்று மே 18 யாழ்.பல்கலைக்கழகத்தினுள் சில மாணவர்கள் 18

## பேராபத்தில் வடக்கு

# 378 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை கொத்தணியுடன் தொடர்புடைய 322 பேர் உட்பட வடக்கில் நேற்று 378 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானதாக மாகாண சுகாதார 03

## ஆயிரத்தை அண்மிக்கும் கொரோனா பலியெடுப்பு

நேற்றும் +19 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 19 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார்.
அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 981 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## கொரோனா +2,456

(கொழும்பு)
நாட்டில் நேற்று மேலும் +2,456 கோவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இதேவேளை, 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1758
சீட்டிழுப்பு திகதி 17.05.2021
வெற்றி இலக்கங்கள்
32 44 48 67
ஆங்கில எழுத்து R
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 25,294,632
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1454
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 17/05/2021
தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
B 04 15 35 54
அடுத்த சுப்பர் ஜக்பொட்
56,127,102/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47
0114 824 824, 0112 333 778 or 1919
DLB<space>LOT<space>SB send 1919
0114 825 825

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 28,62,354/=
திகதி : 17.05.2021
வெற்றி வாரம் : 3161
வர்ணம் : மஞ்சள்
வெற்றி இலக்கங்கள்
45 50 55 56
கன்னி
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 19,08,040

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1280
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 17.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 133,918,159
வெற்றி இலக்கங்கள்
29 48 55 57
ஆங்கில எழுத்து A
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3610
வர்ணம் : கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 17.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 39,931,454
வெற்றி இலக்கங்கள்
33 37 53 60
ஆங்கில எழுத்து R
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## 322 ...

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு ஆடை தொழிற்சாலையில் நேற்று 926 பேருக்கு நடத்தப்பட்ட கொவிட்-19 பரிசோதனையில் 322 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கும் நிலையில் புதுக்குடியிருப்பு மற்றும் முள்ளியவளை பகுதிகள் முடக்கப்படுகிறது.

மேற்படி தகவலை தேசிய கோவிட் செயலணியின் தலைவரும், இராணுவ தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். இதன்படி நேற்று இரவு 11 மணி தொடக்கம் புதுக்குடியிருப்பு மற்றும் முள்ளியவளை பகுதிகள் மறு அறிவித்தல்வரை முடக்கப்படுகிறது.

(ம-3,281)

# மரண அறிவித்தல்



## அன்னலட்சுமி தில்லையம்பலம்

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அன்னலட்சுமி தில்லையம்பலம் நேற்று ( 17.05.2021 ) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும் விக்கினஜெயம், பூவிலுறைவாணி, தவசீலன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெகதீஸ்வரி, சிறீலோகநாதன், வாசுகி (நோர்வே) ஆகியோரின் அருமை மாமியும் சுபாகர், ரெஜீவன், டினேஷ், நிக்ஷன், மிதுனன், காலஞ்சென்ற கேதாஜினி, அபர்ணா (நோர்வே), பிரதீப் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் வல்லிபுரம், சின்னத்தம்பி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.05.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-2172)

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
077 743 5270
021 205 1500
தகவல்:-
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு : 20.05.1944
இறப்பு : 18.05.2020

அமரர்

## கந்தையா சிவபாதம்

( இளைப்பாறிய பிரதி அதிபர் - ஆசிரியர் கலாசாலை, பலாலி )

கணப் பொழுதும் எண்ணவில்லை எம் கலங்கரை விளக்கே!
நீங்கள் இமைப் பொழுதில் எம்மை விட்டகல்வீரென
அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே அப்பா!
நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள் மயமானது
எங்கே காண்போம் உங்கள் மலர்ந்த முகத்தை
உங்கள் பிரிவைத் தாங்குமா எங்கள் இதயம்...
ஒவ்வொரு நொடியிலும் இதயத்தின்
துடிப்பைப் போல உணர்கின்றோம்...
நீங்கள் கடந்து சென்றாலும் எங்கள் அருகில் - நீங்கள்
இருப்பதை நாங்கள் உணர்கின்றோம்...
எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(6899)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மே 18..

முள்ளிவாய்க்கால் பேரவல நினைவேந்தல் ஆண்டுதோறும் மே 18ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்நிலையில் இவ்வாண்டும் நினைவேந்தலுக்கான ஒழுங்குகள் செய்யப்பட்ட நிலையில், சுமார் 20 பேருக்கும் மேற்பட்டவர்களுக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் ஊடாக தடை உத்தரவு பெறப்பட்டிருந்த நிலையில் குறித்த தடை உத்தரவுக்கு எதிராக நகர்த்தல் பத்திரம் நேற்றைய தினம் தாக்கல் செய்யப்பட்டது.

இதனடிப்படையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது

மேலும் பயங்கரவாத நடவடிக்கைகளை தூண்டாத வகையில் நினைவேந்தலை மேற்கொள்ள வேண்டும் என முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது. (ம-3,281)

## பேராபத்தில்..

பணிப்பாளர், வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் ஒரேநாளில் அதிக எண்ணிக்கையான தொற்றாளர்கள் அடையாளம் கண்டறியப்பட்டது இதுவேயாகும்.

இதன்படி நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் 976 பேருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 378 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 327 பேருக்கும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 33 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 7 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 6 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 5 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## +2,456..

நாட்டில் இதுவரை பதிவான தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 145, 202 ஆக அதிகரித்துள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-3)

## பாடசாலை..

செலுத்தப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை விரைவில் திறக்க வேண்டுமாயின் பாடசாலைகளுக்குள் போதியளவு சுகாதார வசதிகளை உறுதி செய்ய வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

மேல் மாகாணத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாகவும், ஏனைய மாகாணங்களிலும் ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (ம-3)


வசனா சப்பிரய / கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 725
வர்ணம்: பச்சை
திகதி: 14.05.2021
வெள்ளிக்கிழமை
V 04 09 45 56
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,614,475
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1451
நிறம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 14/05/2021
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
R 19 28 42 52
அடுத்த சுப்பர் ஜக்பொட 56,082,622/=

அத கோடிபதி
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1277
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 14.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 133,881,851
வெற்றி இலக்கங்கள்
18 19 42 65 Z
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 28,16,008/=
திகதி: 14.05.2021
வெற்றி வாரம்: 3158
வர்ணம்: கடும் நீலம்
வெற்றி இலக்கங்கள்
15 22 28 55
மீனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 506,160

சனிதா
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3607
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 14.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,895,843
வெற்றி இலக்கங்கள்
28 35 46 65 C
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


# அச்சிடல் பெறுகைக்கான அழைப்பு-2021/2022

# வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்

## NP/41/20/1/3/PROC/2021/10

1. யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தின் 2021/2022 ஆம் ஆண்டுக்கான கீழ்வரும் விபரப்படியான அச்சிடலினை மேற்கொள்வதற்கு பிராந்திய பெறுகைக்குழு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைக் கோருகின்றது.

| பெறுகை இலக்கம் | பெறுகை தலைப்பு | அச்சிடலுக்கான விபரங்கள் | |
|---|---|---|---|
| NP/41/20/1/3/PROC/ 2021/10 | பரீட்சை வினாத்தாள் மற்றும் அச்சிடலுக் கான பெறுகை | பரீட்சை வினாத்தாள் அச்சிடல் | Exam Paper Printing |
| | | புத்தகங்கள் அச்சிடல் | Books Printing |
| | | கையேடு அச்சிடல் | Handout Printing |

2. பெறுகைகள் அனைத்தும் தேசிய போட்டி விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.

3. தகுதியான கேள்விதாரர், தற்பொழுதும் செல்லுபடியாகவுள்ள வடக்கு மாகாணத்திற்குட்பட்ட அச்சிடலுக்கான வியாபாரச் சான்றிதழுடன், கறுப்புப் பட்டியலில் தமது பெயர் உட்படாதவராக இருத்தல் வேண்டும். அத்துடன் கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் நிறுவனத்தினை/கிளையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர் பெறுகை உள்ளடக்கம் பகுதி II இல் கூறப்பட்ட தகைமைகளினை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

5. வழங்குநர்கள் அலுவலகத்தில் கிடைக்கும் கேள்வி ஆவணத்திற்கான விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 500/= வினை அலுவலக நாட்களில் 18.05.2021 தொடக்கம் 04.06.2021ம் திகதி வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை அலுவலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

6. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) 31.05.2021ம் திகதி 10.00 மணிக்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் மாநாட்டு அறையில் இடம்பெறும்.

7. மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் கணக்காளர், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் 021 222 2647 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

8. விலைக் கேள்விகள் 07.06.2021ம் திகதி 15.00 மணிக்கு முன்பதாக வலயக் கல்வி அலுவலக கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

9. கூறுவிலை சமர்ப்பித்தல் திகதியில் நாட்டில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலையால் அரசாங்க அறிவித்தலின் பிரகாரம் அலுவலகம் மூடப்பட்டிருப்பின் அடுத்துவரும் அலுவலக நாளில் குறித்த நேரத்தில் சகல விடயங்களும் அமுலில் இருக்கக் கூடியவாறு நடைமுறைப்படுத்தப்படும்.

10. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகை குழுவின் தலைவருக்கு பூரண அதிகாரமுள்ளது.

பெயர்:- **மு.இராதாகிருஷ்ணன்**
பதவி:- **தலைவர்/வலயக் கல்விப் பணிப்பாளர், பிராந்திய பெறுகைக் குழு**
முகவரி:- **வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம், செம்மணி வீதி, நல்லூர்.**
தொலைபேசி:- **021 222 2647**
தொலைநகல்:- **021 222 2647** மின்னஞ்சல்:- **acctjaf@gmail.com**

(C-2166)


தன நிதானய
திகதி - 2021.05.15
சீட்டிழுப்பு இலக்கம் - 519
Y 19 23 51 58
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 15.05.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2777
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 10 35 65 78

மஹஜன சம்பத
திகதி 2021/05/15
சீட்டிழுப்பு இலக்கம் 4482
ஆங்கில எழுத்து X
வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 6 5 9 5 1

மெகா பவர்
திகதி 15/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0838
வெற்றி எழுத்து K
சுப்பர் இலக்கம் 09
வெற்றி இலக்கங்கள் 09 34 42 69

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 15/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1120
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 0 4 0 7 3 9
07117


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
# நல்லூர் பிரதேச சபை
## சபை நிதி வேலைத் திட்டம் - 2021 (கட்டம் I)

01. தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் குறிப்பிட்டஅட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆம் திகதி 04/2016 (11) ஆம் இலக்க பொது சுற்றறிக்கை 3.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பிராந்திய விருப்பம் மற் றும் CIDA தர முன்னுரிமைகள் பொருந்தும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 'தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700 ,021-314-2841) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், பெறுகைக் குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரியில் **2021.05.18 ஆம் திகதியிலிருந்து 2021.06.07 ஆம் திகதி வரை** அலுவலக நாட்களில் **மு.ப 9.00 தொடக்கம் பி.ப 15.00** வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு 2021.06.08 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்விபிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2021.05.28ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| இல | தொடர்பு இலக்கம் | வேலை விபரம், ஒப்பந்த இலக்கம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் காலம் | செல்லுபடியாகும் திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| வடிகாலமைப்பு வேலைகள் | | | | | | | | | |
| 1. | NPS/2021/CF/02/ DRA-PK 1/01 | கொக்குவில் பிடாரியம்மன் கோவில் வீதி வடிகாலமைப்பு தொகுதி -1 (0+000 - 0+200) | 4.79 | 90 நாட்கள் | C8 & C7 | 63 நாட்கள | 09.08.2021 | 70,000.00 | 06.09.2021 |
| 2. | NPS/2021/CF/02/ DRA-PK 2/02 | கொக்குவில் பிடாரியம்மன் கோவில் வீதி வடிகாலமைப்பு தொகுதி -2 (0+200-0+380) | 4.67 | 90 நாட்கள் | C8 & C7 | 63 நாட்கள | 09.08.2021 | 70,000.00 | 06.09.2021 |
| 3. | NPS/2021/CF/02/ DRA-PK 3/03 | கொக்குவில் பிடாரியம்மன் கோவில் வீதி வடிகாலமைப்பு தொகுதி -3 (0+380-0+614) | 6.01 | 90 நாட்கள் | C7 & C6 | 77 நாட்கள | 23.08.2021 | 90,000.00 | 20.09.2021 |
| 4. | NPS/2021/CF/02/ DRA-PK 4/04 | கொக்குவில் பிடாரியம்மன் கோவில் வீதி வடிகாலமைப்பு தொகுதி -4 (0+614-0+723.5) | 3.17 | 90 நாட்கள் | C8 & C7 | 63 நாட்கள | 09.08.2021 | 45,000.00 | 06.09.2021 |

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

**2021.05.18**

(C-2169)

# வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் சந்தைகள், இறைச்சிக்கடைகளினை குத்தகைக்கு வழங்குவதற்கான இடைக்கால மீள் கேள்வி அறிவித்தல் - 2021

சபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக்கடைகளினை 2021 ஆம் ஆண்டின் குறிக்கப்பட்ட காலத்திற்கு (01.06.2021 - 31.12.2021) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 18.05.2021-25.05.2021 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 25.05.2021 பி.ப. 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 25.05.2021 பி.ப. 02.00 மணி


கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "சந்தைகள், இறைச்சிக்கடைகள் இடைக்கால மீள் கேள்வி கோரல்- 2021" என எழுதி மூலப்பிரதியை "தவிசாளர்/ செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்" எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் எதிர்வரும் 25.05.2021 ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ.அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
கேள்விப்பத்திரங்கள், நிபந்தனைகளை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | இடைக்கால மீள் கேள்வித் தொகை (இடைக்கால கேள்வித்தொகையின் 10%இனை கழித்து) | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 01 | அச்சுவேலி பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி தரிப்பிடமும் அச்சுவேலி பஸ் நிலைய வாகன தரிப்பிடமும் | 500.00 | 25000.00 | 5,252,625.00 | |
| 02 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | 140,724.00 | |
| | புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 01 | புத்தூர் பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | 172,818.00 | |
| | கோப்பாய் உப அலுவலகம் | | | | |
| 01 | கோப்பாய் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 311,071.50 | 2250.00 |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 01 | உரும்பிராய் கோழியிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 218,241.00 | 2250.00 |

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**

(C-2167)

# ஆதரவுக்கரம் நீட்டிய ஷிகர் தவான்



இந்திய கிரிக்கெட் வீரர் ஷிகர் தவான் அரியானா மாநிலத்தின் குருகிராம் பொலிஸாருக்கு கொவிட் - 19 உதவிக்காக ஒட்சிசன் செறிவூட்டிகளை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தவான் நன்கொடை அளித்த ஒட்சிசன் செறிவூட்டிகளின் படத்தை குரு கிராம் பொலிஸார் தமது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளதுடன், நன்றிகளையும் தெரிவித்துள்ளனர்.

அதற்குப் பதில் அளித்த ஷிகர் தவான்,

"தற்போதுள்ள கடினமான சூழ்நிலையில் இதுபோன்ற சிறு உதவிகளைச் செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

என் நாட்டு மக்களுக்கு என்னால் இயன்ற உதவிகளை எப்போதும் செய்யக் காத்திருக்கிறேன். இந்த நோய்த் தொற்றுக்கு எதிராக இந்தியா எழுச்சி பெற்று ஜொலிக்கும்" என்று தன் சமூக ஊடகப்பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையை இலங்கை அரசு தட்டிப் பறிக்கின்றது

## கனடா பாராளுமன்ற உறுப்பினர்

**(ரொரன்றோ)**


**இலங்கையில் ஆட்சியாளர்கள் தமிழ்ச் சமூகத்தை மிலேச்சத்தனமான அடக்குமுறைக்குள் வைத்திருக்கவே முயல்கின்றது. அதன் சாட்சியமே முள்ளிவாய்க்கால் நினைவுக் கல்லை காணாமலாக்கி நினைவுத் தூபியையும் இடித்து அழித்த நாகரிகமற்ற செயற்பாடு உறுதி செய்துள்ளது என கனடாவின் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

இச்செயற்பாட்டின் மூலம் தமிழ் மக்களைத் கண்ணீர் விடுவதற்குக் கூட தாம் ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லை என்ற செய்தியைச் சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு மீண்டும் ஒரு தடவை உரத்துக் கூறியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 36/1 தீர்மானத்தின் நிலைமாறு கால ரீதியில் நினைவுகூருவதற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



அச்சர்வதேச தீர்மானத்தை நிராகரித்து ஈழத்தில் தமிழர்களின் நினைவுகூரும் உரிமையை இலங்கை அரசாங்கம் புறக்கணிக்கிறதாயின், இது சர்வதேச நாடுகளையும் உதாசீனப்படுத்துகின்ற செயலாகவே அமையும்.

எமது ஒன்ராறியோ சட்டமன்றம் நிறைவேற்றிய தமிழ் இனப்படுகொலை கல்விவார சட்டமானது, தாயகத்தில் நினைவுத்தூபி சிதைக்கப்பட்ட கடந்த மே-12 அன்று, துணை ஆளுநர் ஒப்பந்தத்துடன் சட்டமூலமாக்கியமை ஈழத்தமிழர்களுக்கு ஆரோக்கியமான செய்தியேயாகும்.

நாம் என்றும் ஈழத்தமிழர்களுக்கான நீதிக்காகக் குரல் கொடுப்போம். சர்வதேச மனித உரிமை தீர்மானங்களை உதாசீனப்படுத்தும் இலங்கை அரசாங்கத்திற்குச் சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலைக்கும் இன்றுவரை இடம்பெற்றுவரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு நீதியைப் பெற்றுக்கொடுத்து தமிழ் மக்கள் ஈழத்தில் நிம்மதியான வாழ்வை வாழச் சர்வதேச தரப்புகள் ஒன்றிணைந்து குரல்கொடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (4)



தமிழ் இனப்படுகொலை வாரத்தின் ஆறாம் நாளான நேற்று முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

(படம்:-தவசீலன்)

## நாட்டில் தீவிரமடையும் கொரோனா; சுகாதார ஊழியர்களுக்கு பாரிய நெருக்கடி

(கொழும்பு)

கொவிட் தொற்றாளர்கள் சிகிச்சை பெறும் வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்கள் தற்போது பாரிய நெருக்கடி நிலைக்குள்ளாகியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வைத்தியசாலை கட்டமைப்புகள் அதன் திறனை கடந்துள்ளமையினால் சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் வைத்தியர் செனால் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகள் மற்றும் கட்டில்களை அதிகரிப்பதனால் மாத்திரம் நெருக்கடிக்கு தீர்வு கிடைத்து விடாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார திறன் என்பது கட்டில்கள் மாத்திரம் அல்ல என்பதனை தெளிவுபடுத்த விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் தொற்றாளர்களுக்காக ஒரு லட்சம் கட்டில்கள் இருந்தாலும் பயிற்சி பெற்ற ஊழியர்கள் போதுமான அளவு இல்லை என்றால் அதில் பயனில்லை.

தற்போது வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் இரவு பகல் பாராமல் பணியாற்றுகின்றனர்.

உறக்கமின்றி பணியாற்றுகின்றார்கள். அவர்கள் சோர்வடைந்துள்ளனர். பாரிய நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர். கனகசபை யோகநாதன்



வலம்புரிப் பத்திரிகையில் பணியாற்றிய கனகசபை யோகநாதன் அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வலம்புரி நிர்வாகம்.


## இந்து கலாசார நிதியத்தின் தலைவராக கபில குணவர்த்தன



(கொழும்பு)

புத்தசாசன,சமயங்கள் மற்றும் கலாசார அமைச்சரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்து கலாசார நிதியத்திற்கான புதிய உறுப்பினர்களை நேற்று நியமித்துள்ளார்.

1985 இலக்கம் 31 பாராளுமன்ற சட்டமூலத்தின் கீழ், இந்து சமய மற்றும் கலாசாரத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்து கலாசார நிதியம் ஏற்படுத்தப்பட்டது.

இந்த நிதியத்தின் புதிய தலைவரான புத்தசாசனம், சமயங்கள் மற்றும் கலாசார விவகார அமைச்சின் செயலாளர் கபில குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டான் நீரேரியில் இறால் அறுவடை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

**பொருளாதார ரீதியான எமது மக்களின் அபிவிருத்தி என்பது சகல பிரதேசங்களுக்கும் அனைவருக்கும் ஆறுபோல் பரவ வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**



கரணவாய் மண்டான் நீர் ஏரியில் நேற்று இறால் அறுவடையை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொருளாதாரத்தில் எமது மக்கள் அபிவிருத்தியடைந்து வருவது இங்கு மட்டுமல்ல இந்த நாட்டில் வாழும் சகல மக்களினதும் வாழ்விடங்கள் தோறும் ஆறுபோல் பாய்ந்து பரவ வேண்டும் என்பதுடன் மக்களின் வாழ்வும் வளமும் எழுச்சியும் பெற வேண்டும் என்றே விரும்புகின்றேன்.


ஜனாதிபதியின் 'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' எனும் திட்டத்தின் கீழ் கொள்கை வழி கடற்றொழில் அமைச்சினது செயற்றிட்டங்கள் முழுமையாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எமக்குக் கிடைக்கின்ற வாய்ப்புகளை சரியாக பயன்படுத்தி எமது பிரதேசத்திலிருக்கும் வளங்களை அடையாளங்கண்டு, சுய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும்.

கடந்த பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி கடற்றொழில் அமைச்சரினால் மண்டான் பிரதேசத்தில் இறால் குஞ்சுகள் விடப்பட்ட நிலையில், அவை தற்போது அறுவடைக்கு தயாரகவுள்ளன. இந்நிலையில், அவற்றின் அறுவடையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று கொரோனா தொடர்பான சுகாதார நடைமுறைகளுடன் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்..

இதன்மூலம் குறித்த நீர்நிலையை வாழ்வாதாரமாக நம்பி வாழும் சுமார் 200 குடும்பங்களை சேர்ந்த மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு ஒரு வரப்பிரசாதமாக அமையப்பெற்றுள்ளது. (5-8-60-33)

# அ.அட்டைப் பரிசோதனை யாழ்.நகரில் தீவிரம்



(நல்லூர்)

யாழில் பொலிஸாரினால் அடையாள அட்டை பரிசோதனை தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாண நகருக்குள் நுழையும் பொதுமக்கள் அனைவரிடமும் பொலிஸாரினால் அடையாள அட்டை பரிசோதிக்கப்படுகிறது. அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய நடைமுறையின்படி நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

தொழில் நிலையங்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் கடமை புரிவோர், அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோர் தவிர்ந்த ஏனையோர் அனைவரும் அடையாள அட்டை பரிசோதனையின் பின்னரே அனுமதிக்கப்படுவர். (5-6-33)

# பயணத்தடை நாட்களில் யாசகர்களுக்கு உணவு



(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தொற்று நோய் காரணமாக கடந்த மூன்று நாட்களாக விதிக்கப்பட்டிருந்த பயணத் தடை காரணமாகப் பசியால் வாடிய யாழ்.குடாநாட்டு வீதிகள் மற்றும் ஆலயங்களில் தங்கியுள்ள யாசகர்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்களைத் தேடிச் சென்று இணுவையூர் சிவருஷி என்பவர் உணவு வழங்கினார். (5-6-18)



தென்மராட்சி கொடிகாமம் பிரதேசத்தில் கடந்த வாரம் முடக்கப்பட்டுள்ள கிராமத்தில் குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கினார்.

(படம்:-சுபேசன்)




# விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்திருநாட்டில்வாழும் மக்களும் உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் நாளை 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு துன்னாலை இந்திரன் கண்ணகை அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் கோவிலின் பிரதம குருக்கள் சக்தி உபாசகீரர் சிவஸ்ரீ சி.இந்திரராசக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பு செய்யப்படும். (5-6)

# கழிவுகளைப் போடுவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

(கரணவாய்)

கரவெட்டி பகுதியிலுள்ள தோட்டக்காணிகளில் கழிவுகளை வீசுவதால் தாம் பெரும் சிரமங்களுக்குள்ளாவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கரவெட்டி 750 வழிப்பாதை வீதியை அண்மித்த விவசாயம் மேற்கொள்ளும் தோட்டக் காணிகளில் பொறுப்பற்ற சிலர் கழிவுகளைக் கொட்டுவதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் இதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (5-6-60)



யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் வழிகாட்டுதலின் கீழ் 51 ஆவது படைப்பிரிவு தளபதியின் வழிகாட்டுதலில் இராணுவத்தின் 521 ஆவது பிரிகேட் படைப்பிரிவினரால் அச்சுவேலி நகரப்பகுதி, சந்தை தொகுதி என்பன கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டன.

(படம்:- சிவசாந்தன், ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை வடக்கு பிரதேச செயலகம் விரைவில் தரமுயர்த்தப்பட வேண்டும்

## ஜனநாயக இளைஞர் அமைப்பு

(கல்முனை)

அம்பாறை கல்முனை தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையான கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தல் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என ஜனநாயக இளைஞர் அமைப்பின் பொதுச்செயலாளர் கோ.மிதுஜன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1989 இல் அப்போதைய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யு.தேவநாயகம் முயற்சியில் உருவாக்கப்பட்டது கல்முனை வடக்கு பிரதேச செயலகம். அப்போது இதனுடன் சேர்த்து இருபதுக்கு மேற்பட்ட உப பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டன. அவை அனைத்தும் தற்போது நிதி மற்றும் காணி அதிகாரங்களை கொண்ட பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளன.

ஆனால் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் மட்டும் இன்னும் தரமுயர்த்தப்படாமல் நிதி மற்றும் காணி அதிகாரங்கள் அற்ற செயலகமாக காணப்படுகின்றது.

1993 ஆம் ஆண்டில் இருந்து பிரதேச செயலகமாக தரமுயர்த்துவதற்கான முயற்சிகள் தமிழ்த்தரப்புக்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இது வெறும் முயற்சியாகவே இன்றுவரை காணப்படுகின்றது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் கல்முனை புத்திஜீவிகள் மற்றும் மக்களால் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பல்வேறுபட்ட அரசியல்வாதிகளால் வாக்குறுதிகள் வழங்கப்பட்டது. ஆனாலும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என தெரிவித்தார். (4-350)

# அபிவிருத்தி அதிகாரி மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(கொழும்பு)

பிலியந்தலை பிரதேசத்தில் அபிவிருத்தி அதிகாரியான பெண்ணொருவர் இனந்தெரியாத நபரால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

குறித்த பெண் அதிகாரியை தாக்கிய சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளதாகவும் அவர் தொடர்பில் பிலியந்தலை விசேட விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தெல்தர கிராம உத்தியோகத்தர் பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்காக 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவு பொருட்கள் அடங்கிய பொதியை வழங்கிய பின்னர், வீதியில் சென்று கொண்டிருந்த போதே அவர் இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

கொவிட் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அரச சேவையாளர்களுக்கு ஏதேனும் இடையூறு ஏற்படுத்த முயற்சித்தால் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (4)

# தேர்தல் முறையில் மாற்றம்

## -மனோ கணேசன்-

(கொழும்பு)

தேர்தல் முறையில் மாற்றத்தை கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சி உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக பேசப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி ஜனாதிபதி பாராளுமன்ற மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைகளில் அரசாங்கம் மாற்றத்தை கொண்டுவரவுள்ளதாக மனோ கணேசன் தெரிவித்தார். (4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 25 செவ் 5 சூரி 8 இல்
உயரம்: 5.11'
தகைமை/தொழில்: HND QS,BSc, தனியார் கணனி விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண், உள்நாடு மட்டும்.
தொ.இ: B/813

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 24 செவ் 2 சூரி 3 இல் உயரம்: 6'
தகைமை/தொழில்: BED,BSc, ஆசிரியர் உதவி அதிபர்
எதிர்பார்ப்பு: உள்நாடும் வெளிநாடும்
தொ.இ: B/823

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: சித்திரை கி.பா: 24 1/2 செவ் 12 சூரி 8 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: B.A Commerce, முகாமையாளர்
எதிர்பார்ப்பு: உள்நாடு, பட்டதாரி மட்டும்
தொ.இ: B/851

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 18 1/4 செவ் 7 சூரி 12 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பட்டதாரி (லண்டன்)
எதிர்பார்ப்பு: லண்டனில் வதிவிட உரிமையுள்ள பெண்
தொ.இ: B/972

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 65 செவ் 8 சூரி 9 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:விஞ்ஞான பட்டதாரி
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/4943

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 46 செவ், சூரி 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:B.A அரச ஆசிரியர்
எதிர்பார்ப்பு:தொழில்நுட்ப உத்தியோகத்தர், உள்நாடு மட்டும்
தொ.இ:G/4976

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 45 செவ் 2 சூரி 10 இல் உயரம்:5'2"
தகைமை/தொழில்:A/L, தனியார் கடை
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்(கனடா, லண்டன், அவுஸ்திரேலியா)
தொ.இ:G/5000

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா:43 3/4 செவ் 1 சூரி 6 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: B.D.S பல் மருத்துவம்
எதிர்பார்ப்பு: பொறியியலாளர், கணக்காளர், வெளிநாடு மட்டும்
தொ.இ:G/5039

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# பல்கலைக்கழக அனுமதி- 2020/2021
# உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)

## மொழிபெயர்ப்பில் கலைமாணி கற்கைநெறி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

மேற்படி நான்கு வருட பட்டப் படிப்புக் கற்கைநெறிக்கு அனுமதி பெறவிரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 04.06.2021 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

<u>அனுமதிக்கான பொது நிபந்தனைகளும் தகைமைகளும்</u>

மொழிபெயர்ப்பில் கலைமாணி கற்கைநெறியைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதாவது ஒரு பாடப்பிரிவில் ஆகக் குறைந்தது 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

<u>உளச்சார்புப்பரீட்சை</u>

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் தமிழ் மற்றும் ஆங்கிலமொழித் திறமையைப் பரீட்சிப்பதற்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சைகள் தமிழ், ஆங்கில மொழிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும்.

<u>விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்</u>

விண்ணப்பதாரிகள் **www.jfn.ac.lk** என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளம் ஊடாக தத்தமது விண்ணப்பங்களை நிகழ்நிலையாக **(online)** 04.06.2021 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ/த) 2020 பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டினையும் விண்ணப்பத்துடன் இணைத்துக் கொள்ளுதல் அவசியமானது.

விண்ணப்பித்த பிரதிகளை பதிவிறக்கம் செய்து அதில் கையெழுத்திட்டு க.பொ.த (உ/த) பெறுபேற்றுப் பத்திரப் பிரதி மற்றும் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டினையும் இணைத்து உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மொழிபெயர்ப்புக் கற்கைநெறி 2020/ 2021" எனக் குறிப்பிட்டு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அவர்களினால் வழங்கப்பட்ட மின்னஞ்சல் (e-mail) முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

<u>கட்டணவிபரம்</u>

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பக் கட்டணம் ரூபா 500.00 ஐ ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளை, கணக்கு இலக்கம் 040002400001655 இற்கு செலுத்தி இருத்தல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி எண்- 021 222 6714, மின்னஞ்சல் முகவரி- **ar.admissions@yahoo.com** மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(C-2164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று நாட்களில் 48 பேருக்கு தொற்றுறுதி

(அக்கராயன்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று நாட்களில் 48 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.**

இதனடிப்படையில் பளையில் 5 பேருக்கும், கரைச்சியில் 22 பேருக்கும் கண்டாவளையில் 11 பேருக்கும், பூநகரியில் 3 பேருக்கும், கிளிநொச்சியில் உள்ள இரண்டு ஆடைத்தொழிற்சாலைகளை சேர்ந்த 7 பேருக்கும் என 48 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது.



கல்மடு 7 ஆம் யுனிற் பகுதியில் ஒரு நாளில் பலருக்கு தொற்று இனம் காணப்பட்டமையால் குறித்த பகுதி மாத்திரம் முடக்கப்படுகிறது என மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

எனவே நாளுக்கு நாள் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் சூழ்நிலையில் பொது மக்கள் அதிக விழிப்புடன் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றி, சுகாதாரத் துறையினருக்கும், பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கி பொறுப்புடன் செயற்படுமாறு சுகாதார அதிகாரிகள் கோரியுள்ளனர். (4-8-350)

# முல்லை. பொது வைத்தியசாலையில் நிரந்தரப் பணிப்பாளர் இல்லை

## கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு



(அக்கராயன்)

முல்லைத்தீவு பொது வைத்தியசாலை நிரந்தரப் பணிப்பாளர் இல்லாமல் கடந்த பதினொரு நாட்களாக கொவிட் -19 நெருக்கடிகளுக்குள் இயங்கி வருவதாக கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்தார்.

கடந்த 2020 ஆம் ஆண்டில் ஐந்து தடவைகள் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையின் பணிப்பாளர்கள் இடம் மாறிச் சென்றுள்ளனர்.

தற்போது கொவிட் 19 அச்சுறுத்தல் நிலவிவரும் நிலையில் வைத்தியசாலையின் பணிப்பாளர் கடந்த 6 ஆம் திகதி இடம் மாற்றம் பெற்று சென்று விட்டார்.

மாவட்டத்தின் சுகாதாரப் பணிப்பாளரே தற்போது வைத்தியசாலையின் பணிப்பாளராகவும் செயற்படுகின்றார்.

இந்நிலையில் வடமாகாண ஆளுநர் முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்கு நிரந்தர அல்லது பதில் பணிப்பாளர் ஒருவரை உடனடியாக நியமித்து மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிகளை முன்னெடுப்பதற்கு வழியேற்படுத்தும்படி வேண்டுகின்றோம் என பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார். (4-8-350)




# கிளிநொச்சியில் தொடரும் கசிப்பு விற்பனை

(அக்கராயன்)

கிளிநொச்சி புளியம்பொக்கணை சந்திப் பகுதியில் கசிப்பு விற்பனை அதிகரித்துள்ளதாக அப்பகுதி மாதர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

சந்திப் பகுதிக்கு பெண்கள் செல்வதற்குக்கூட தற்போது அச்சம் கொள்ளும் வகையில் இச்சந்திப் பகுதி, ஒழுங்கைகளில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக மாதர் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

தூர இடங்களில் இருந்து எடுத்து வரப்படும் கசிப்பு புளியம்பொக்கணை சந்திப் பகுதியில் விற்பனை செய்யப்படுவதாகவும் இதன் காரணமாக பெண்கள், சிறுவர்கள் புளியம் பொக்கணை சந்திப் பகுதிக்குச் செல்வதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.

கசிப்பினைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலகத்தில் போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்துவதற்கான கூட்டங்கள் நடைபெற்றாலும் கிராம மட்டங்களில் அவை இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என மாதர் சங்கங்கள் தெரிவிக்கின்றன. (4-8-350)

# நினைவு முற்றத்தின் வீதிகளை தடைசெய்ய முயற்சிக்கும் பொலிஸார்



(பனிக்கன்குளம்)

இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் வருடம் தோறும் மே 18 தமிழ் மக்கள் நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்துக்கு நுழையும் அனைத்து பாதைகளையும் தடை செய்வதற்கு பொலிஸார் வீதித் தடைகளை போடுவதற்கு பொருட்கள் கொண்டு வந்து இறக்கியுள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு பரந்தன் வீதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்துக்கு நுழையும் கப்பல் வீதி சந்தியில் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. (4-8-281)

# வெளியிடங்களில் மேய்ச்சலில் ஈடுபட அனுமதிக்க வேண்டும்

## முல்லை.மக்களின் வேண்டுகோள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்காக வெளியிடங்களுக்கு கொண்டு செல்வதற்கான அனுமதிகள் கிடைக்கப் பெறவில்லை என மாந்தை கிழக்கின் கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனிக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை தற்போது நடைபெற்று வரும் நிலையில் வெளியிடங்களுக்கு கால்நடைகளை கொண்டு சென்று மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்கான அனுமதி கிடைக்காததன் காரணமாக கால்நடை வளர்ப்பாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

மாந்தை கிழக்கில் நூற்றுக்கணக்கான கால்நடைகள் உள்ள போதிலும் மேய்ச்சல் தரவைகள் இல்லாததன் காரணமாக கால்நடை வளர்ப்பு நெருக்கடியான நிலைமையுடன் காணப்படுகின்றது.

இந்நிலையில் கால்நடைகளை வெளியிடங்களுக்குக் கொண்டு சென்று மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்கான அனுமதியினை விரைவாக அதிகாரிகள் பெற்றுத்தர வேண்டும் என மாந்தை கிழக்கின் கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-8-350)

# மின் கம்பங்களை மாற்றியமைக்கவும்

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட கிராஞ்சி கிராமப்பகுதியில் வீதியின் மையப் பகுதியிலுள்ள மின்கம்பங்களை வீதியின் அருகில் அமைக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆரம்பத்தில் குறித்த வீதி பயன்பாடின்றி இருந்ததனால் வீதியின் மையப்பகுதியில் குறித்த பிரதேசத்துக்கான மின்கம்பங்கள் மின்சார சபையினால் போடப்பட்டு மின்விநியோகம் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது பிரதேச சபையினால் குறித்த வீதி புனரமைக்கப்பட்டதனால் குறித்த மின் கம்பங்களை வீதியின் இரு மருங்கிலும் அமைக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை (4-8-315)

# முள்ளிவாய்க்கால் நினைவுகூரலை இல்லங்களில் மேற்கொள்ளுங்கள்

(நெளுக்குளம்)

முள்ளிவாய்க்கால் பகுதியில் கொல்லப்பட்ட எமது மக்களை நினைவுகூருவதைத் தடுக்கின்ற அந்த நிலையிலிருந்து நாங்கள் முன்னேறிச்செல்ல வேண்டியிருக்கிறது என முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின் வட-கிழக்கு பொதுக் கட்டமைப்பின் இணைத் தலைவரும், தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத் தலைவருமான, அருட்பணி சின்னத்துரை லியோ ஆம்ஸ்ரோங் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவேந்தல் தொடர்பாக அவரிடம் நேற்று வினவிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாவினுடைய பரவலின் காரணமாக, இல்லங்களிலிருந்து இந்நினைவு கூருதலை மேற்கொள்ளவும்.

தங்கள் பிரதேசத்தில் இருக்கிற அனைத்து ஆலயங்களிலும், மாலை ஆறு மணிக்கு மணிகள் ஒலிக்க செய்து, ஒரு அகவணக்கத்தை செலுத்தி மக்கள் அனைவரும் குடும்பமாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றி, அகவணக்கத்திலே பங்கெடுத்து, விளக்கொன்றை ஏற்றி இறந்தவர்களுக்காக ஜெபிக்க, மன்றாட அழைக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (4-8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

18.05.2021
வைகாசி 04, செவ்வாய்க்கிழமை
சஷ்டி முற்பகல் 8.41 மணிவரை
பூசம் முற்பகல் 11.16 மணிவரை
சுபநேரம் 10.23-11.53 மணிவரை
இராகுகாலம் 2.53-4.23 மணிவரை
சந்திராஷ்டமம்:- பூராடம், உத்தராடம் வளவன்


மேஷம்

மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.


ரிஷபம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள்.


மிதுனம்

உறவினர்கள் வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.


கடகம்

கனிவாகப் பேசி காரியங்கள் சாதித்துக் கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.


சிம்மம்

தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், உடல் நலனில் கவனம் தேவை.


கன்னி

திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள்.


துலாம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள்.


விருச்சிகம்

எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெற்று மகிழ்ச்சி தரும், பயணங்களால் பலனுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ரோக பயமுண்டு.


தனுசு

கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களில் சிறு தடை தாமதம் என்பன ஏற்படலாம், பயணத்தால் மன உளைச்சலுண்டு.


மகரம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.


கும்பம்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.


மீனம்

யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

உயிரிருக்கும்வரை நம்பிக்கையும் இருக்கும்

# பிரபாகரனால் முடியாததை ஆளும் கட்சியினர் முடிப்பார்களா?

## பொறுத்திருந்து பார்ப்போம் என்கிறார் நளின்

(கொழும்பு)

**ஒற்றையாட்சி நாடான இலங்கைக்குள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனால் செய்ய முடியாததை , கொழும்பு துறைமுக நகர சட்ட மூலத்திற்கு ஆதரவளிப்பதன் மூலம் ஆளுங் கட்சியினர் செய்வார்களா? இல்லையா? என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.**



கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

துறைமுக நகர்சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் இலங்கைக்குள் இரு நாடுகள் இரு ஆட்சி என்ற நிலைமை தோற்றம் பெற்று விடும்.

எனவே இவ்வாறான நிலைமை தோற்றம் பெறாமலிருப்பதற்கு ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்த சட்ட மூலத்திற்கு ஆதரவளிக்கக் கூடாது.

எனினும் பிரபாகரனால் செய்ய முடியாததை இந்த சட்டமூலத்திற்கு ஆதரவளிப்பதன் மூலம் இவர்கள் செய்து விடுவார்களா? என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். அவ்வாறு செய்தால் அது நாட்டை காட்டிக் கொடுக்கும் செயலாகும். (4)

# தொழில் உரிமையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இராதாகிருஷ்ணன் கோரிக்கை

(நுவரெலியா)

பெருந்தோட்ட கம்பனிகள் ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு அரசாங்கம் உத்தரவிட்டதை தொடர்ந்து, தொழிலாளர்கள் மீது பல்வேறு சுமைகளை சுமத்தி வருகின்றது.

இது தொடர்பாக தொழில் ஆணையாளர் பெருந்தோட்ட கம்பனிகளையும் தொழிற்சங்கங்களையும் அழைத்து பேச்சுவார்த்தை ஒன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணி மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தொழில் ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பெருந்தோட்ட கம்பனிகள் ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பின் பின்பு தொழிலாளர்கள் மீது அவர்களுடைய தொழில் மற்றும் தொழிலாளர் உரிமைகள் தொடர்பாக மிகவும் கடுமையாக நடந்து கொள்கின்றார்கள்.

தொழிலாளர்களை அடிமைகளை நடத்துவது போல நடத்த முற்படுகின்றார்கள். ஒரு சில தோட்ட அதிகாரிகள் அடாவடித்தனமாகவும் தொழிலாளர்கள் தங்களுடைய அடிமைகள் எனவும் நினைத்துச்செயற்படுகின்றார்கள். இது தொடர்பாக தொழிலாளர்கள் தொடர்ந்தும் எங்



களுடைய கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்கள்.

எனவே, தொழிலாளர்களின் நலன்சார்ந்த தொழிற்சங்கம் என்ற அடிப்படையில் நாங்கள் இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

எனவே, இந்த விடயம் தொடர்பாக தங்களுடைய தலைமையில் கொழும்பில் பேச்சுவார்த்தை ஒன்றை ஏற்பாடு செய்து இந்த முரண்பாடுகளை சுமுகமாக தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதில் குறிப்பிட்டுள்ளார். (4)

## லக்சல, சலுசல நிறுவன தலைவர் காலமானார்

(கொழும்பு)

லக்சல மற்றும் சலுசல நிறுவனங்களின் தலைவர் பிரதீப் குணவர்த்தன காலமானார்.

இவர் வேரஹேர கே.டி.யூ வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானதாக தெரிவிக்கப்படுகிறது. (4)

# சுகாதார நடைமுறைகளை மீறிய 262 பேர் கைது



(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று முன்தினம் மேலும் 262 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேல் மற்றும் தென் மாகாணங்களிலேயே அதிகளவான கைது நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதுடன் இதன்போது 15 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிரிவு


ஞாபகம் இருக்கட்டும். பலகைப் பகுதி மேல் நோக்கியும், கட்டிலின் கால்கள் கீழே தொங்குவது போலவும் இருக்க வேண்டும்.

அக்பர் சக்கரவர்த்தியைக் கட்டாயம் நேரில் பார்த்தாக வேண்டும் என்று சொல். அவரைப் பார்த்து முடிக்கும்வரை நீ கட்டிலை கீழே வைக்கக்கூடாது" என்று பீர்பால் விளக்கினார்.

பிறகு பீர்பால் தச்சரிடம் காதோடு ஏதோ இரகசியம் சொன்னார். "அக்பரிடம்சொல்வதற்கு முன்னால் வேறு யாரிடமும் நான் சொன்ன இரகசியத்தை வெளியிடாதே" என்று எச்சரித்தார்.

கட்டில் தயாரானது. ஒருநாள் நண்பகலுக்குச் சற்றுமுன் கண்கள் கூசும்படி வெயில் பலமாக இருந்தது. பீர்பால்சொன்ன விதமாகவே தச்சர் கட்டிலைத் தூக்கிக்கொண்டு அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

விசித்தரமான முறையில் அவர் கட்டிலைத் தூக்கி வருவதைப் பார்த்துக் காவலர்கள் குழப்பமடைந்தனர். தச்சர் கட்டிலைக் கீழே வைக்கவும் மறுத்துவிட்டார். சக்கரவர்த்தியைப் பார்த்தாக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார்.



அக்பருக்குச் செய்தி சென்றது. அவர் அரண்மனை வாயிலுக்கு வந்தார். அவர் தச்சரைப் பார்த்து, "இது என்ன கோமாளித்தனம்? எதற்கு இப்படி கட்டிலை தூக்கிக்கொண்டு நிற்கிறாய்? இங்கே கட்டில் வாங்கப் போவதாக யார் சொன்னது? என்னைப் பார்த்ததும் மரியாதை காட்டுவதற்காவது கட்டிலை கீழே இறக்கி வைக்க வேண்டாமா?" என்று அதட்டல் போட்டார்.

"ஆலம்பனா! இது கோமாளித்தனமில்லை. இந்தக் கட்டில் விற்பனைக்கும் இல்லை. அற்பப் பொருளான இதை அரண்மனையில் விற்க யாருக்குத்தான் துணிச்சல் வரும்? சக்கரவர்த்தி அவர்கள் அறிவித்த புதிருக்கு இதுதான் விடை" என்றார் தச்சர்.

தமது மீசையைத் திருகியபடியே அக்பர் கேட்டார், "என்ன உளறுகிறாய்? நான் போட்ட புதிருக்கும், இந்தக் கட்டிலுக்கும் என்ன சம்பந்தம்? ஏன் இன்னும் இதைக் கீழே வைக்காமல் பிடித்துக் கொண்டிருக்கிறாய்?"

(தொடரும்)

# மகாபாரதம்

81

இதுகேட்ட துரியோதனன் கடும் சினம் கொண்டான். கண்ணனை கைதியாகப் பிடித்துச் சிறையில் வைக்க முயன்றான். அதைக் கண்டு நகைத்த கண்ணன் தன் விஸ்வரூபத்தை அனைவரும் காணச் செய்தார்.

அவரிடமிருந்து எல்லா தேவர்களும் மின்னல் போல் காட்சி அளித்தனர். எங்கெங்கு நோக்கினும் கண்ணன் தான். ஒரு கோடி சூரியன் உதயமாயிற்றோ என அனைவரும் திகைத்தனர்.

சங்கு, சக்கரம், கதை, வில், கலப்பை என எல்லாக் கருவிகளும் அவர் கரங்களில் ஒளி வீசின.



கண்ணனை பீஷ்மர், விதுரர், துரோணர், திருதராட்டிரன், அசுவத்தாமா, விகர்ணன் ஆகியோர் கரம் குவித்து வணங்கி வழி அனுப்பினர். கண்ணன் குந்தியைக் காண[illegible]சந்றார். அவையில் நடந்தவற்றை அத்தையிடம் கூறினார்.

[illegible]சந்தித்து அவனது பிறப்பின் இரகசியத்தைக் கூறினார். தனது பிறப்பின் இரகசியத்தை யுத்தத்திற்கு முன் வெளியிட வேண்டாம் என்றான் கண்ணன். துரியோதனனுடன் ஆன நட்பை யாரும்பிரிக்க முடியாது என்றும் உரைத்தான்.

பின் தாய் குந்தி தேவி கர்ணனை சந்தித்து கர்ணன் பிறந்த சூழலை உரைத்தாள். பின் தாயிடம் கர்ணன் "அருச்சுனனைத் தவிர மற்ற நால்வருடன் போரிட மாட்டேன்" என உறுதி அளித்தான்.

பின்" தாயே! அருச்சுனனுடன் ஆன போரில் யாரேனும் ஒருவர் மடிவோம். அப்படி நான் மடிந்தால் என் தலையைத் தங்கள் மடியில் வைத்து மகனே எனக் கதறி அழுது நான் உன் புதல்வன் என்பதை உலகிற்கு உணர்த்து.

நான் வெற்றி பெற்றாலும் என் மூத்த மகன் வென்றான் என உண்மையைத் தெரிவி. ஆனால் எக்காரணம் கொண்டும் போருக்கு முன் என் பிறப்பின் ரகசியத்தை யாருக்கும் அறிவிக்க வேண்டாம் "என்றான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீரில் கலந்து குடிக்கும் கொரோனா தடுப்பு மருந்து

(டில்லி)

**தண்ணீரில் கலந்து குடிக்கும் வகையில் பவுடர் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ள டிஆர்டிஓ மருந்து, கொரோனாவுக்கு எதிராக சிறப்பாக செயற்படுவது தெரியவந்துள்ளது.**

இந்தியாவில் கொரோனா வைரஸின் கோரத்தாண்டவம் குறையவில்லை. தடுப்பூசி மட்டும்தான் கொரோனாவை கட்டுப்படுத்தும் ஒரே தீர்வாக சொல்லப்படுகிறது.

இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) கொரோனாவுக்கு எதிரான 2-டிஜி என்ற மருந்தை தயாரித்துள்ளது.



வாய்வழியாக உட்கொள்ளும் வகையில் பவுடர் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த மருந்தை தண்ணீரில் கரைத்து குடிக்க வேண்டும்.

டிஆர்டிஓ ஆய்வகம் மற்றும் ஐதராபாத்தை மையமாகக் கொண்ட டாக்டர் ரெட்டிஸ் ஆய்வகங்கள் இணைந்து இந்த மருந்தை உருவாக்கி உள்ளன.

இந்த மருந்தானது, மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நோயாளிகளை விரைவாக மீட்டெடுக்க உதவுவதுடன், ஒட்சிசனை சார்ந்திருக்க வேண்டிய ஆபத்தான நிலையை குறைக்கிறது என பரிசோதனைகளில் நிரூபணமாகி உள்ளது.

எனவே, அவசரகால தேவைக்கு இந்த மருந்தை பயன்படுத்தலாம் என மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி அளித்தது. இதையடுத்து 2-டிஜி மருந்து டில்லியில் நேற்று அறிமுகம் செய்யப்பட்டது. மருந்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் ஆகியோர் அறிமுகம் செய்தனர்.

முதல்கட்டமாக 10,000 மருந்து பக்கெற்றுகளை பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வழங்கினார்.


இந்த மருந்துகள் டில்லியில் உள்ள மருத்துவமனைகளில் விரைவில் விநியோகம் செய்யப்படுகிறது. (8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-3 395 659**

**தொற்று :- 163 814 518**

**(நேற்றைய நிலவரம்)**



**பிரான்ஸ் புளோமினல் மாநகரத்தில் நிறுவப்பட்ட நினைவுக்கல் முன்பாக மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று முன்தினம் இடம்பெற்றது. காலை 11.00 மணிக்கு பொதுச்சுடர், ஈகச் சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வின் இறுதியில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கினர்.**

## செல்பி மோகத்தால் ஏழு பேர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் செல்பி எடுக்க முயன்றதால் படகு கவிழ்ந்து ஏழு பேர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தோனேசியாவின் ஜாவா தீவில் ஒரு படகில் 20 பேர் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

படகு நடுக்கடலில் சென்ற போது அனைவரும் ஒரு இடத்தில் நின்று செல்பி எடுக்க விரும்பியுள்ளனர். அதன்படி, அனைவரும் ஒரே பக்கம் செல்ல, படகு எதிர்பாராத விதமாக கவிழ்ந்தது. இதில் ஏழு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். (8)

## சீனாவில் அடுத்தடுத்து இரு சூறாவளிகள்

- 12 பேர் பலி
- 429 பேர் காயம்
- 157 வீடுகள் சேதம்



(பீஜிங்)

சீனாவின் மத்திய நகரமான வுஹான் மற்றும் கிழக்கு மாகாணமான ஜியாங்சுவில் உள்ள ஷெங்ஸே நகரம் ஊடாக இரு சூறாவளிகள் வீசியதில் 12 பேர் உயிரிழந்துள்ளதோடு, நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

குறித்த சூறாவளி கடந்த வெள்ளிக்கிழமை கெய்டியன் மாவட்டம் வழியாக இரவு 8.39 மணிக்கு வீசியதில் 280 பேர் காயமடைந்துள்ளனர்.

சூறாவளியால் வுஹான் நகரில் 27 வீடுகள் இடிந்து விழுந்தன. இது தவிர 130 வீடுகள் சேதமடைந்தன.

மற்றுமொரு சூறாவளி ஜியாங்சு மாகாணத்தின் சுஜோ பகுதியில் உள்ள ஷெங்ஸே நகரைத் தாக்கியது. அதில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதோடு, 149 பேர் காயமடைந்துள்ளனர். (8)

## இஸ்ரேலில் தொடரும் வான்வழித் தாக்குதல்

- 42 பேர் பலி



(ஜெருசலேம்)

காசாவில் ஹமாஸ்"க்கு எதிரான இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கை "முழு பலத்துடன்" தொடரும் என பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு" தெரிவித்துள்ளார்.

தேவையான அளவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அமைதியை மீட்டெடுக்க மேலும் காலம் எடுக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 16 பெண்கள் மற்றும் 10 சிறுவர்கள் உள்ளிட்ட மேலும் 42 பேர் கொல்லப்பட்டதாக காசா நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவில் 55 சிறுவர்கள் உள்ளிட்ட 188 பேர் மரணித்தனர். அத்துடன் 1,230 பேர் காயமடைந்துள்ளனர். இதற்கிடையில் இந்த விடயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை அவசர கூட்டமொன்றை நடத்தியுள்ளது.

வன்முறை முழுமையாக அதிகரித்து விட்டதென கூறியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ், இந்த மோதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகம்பறை சிறைக்கைதிகள் கூரைமீது ஏறி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

போகம்பறை சிறைச்சாலை கைதிகள் சிலர், கூரை மீது ஏறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் நேற்று ஈடுபட்டனர்.

தமக்கு விரைவாக பி.சி.ஆர். பரிசோதனை செய்ய வேண்டும் மற்றும் உடனடியாக பிணை வழங்க வேண்டும் என கோரியே குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை இவர்கள் தொடங்கியுள்ளனர்.



சுமார் 40 கைதிகள் இவ்வாறு கூரை மீது ஏறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4)

## எல்லைகளைக் கடக்க முற்பட்ட 34 வாகனங்கள் திருப்பியனுப்பப்பட்டன

(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 34 வாகனங்கள் மாகாண எல்லைகளை கடக்க முயன்றதுடன், அவை அனைத்தும் திருப்பி அனுப்பப்பட்டதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதற்கமைய 1583 வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன், அந்த வாகனங்களில் பயணித்த 3452 பேர் கண்காணிக்கப்பட்டனர்.

இவர்களுள் பெரும்பாலானோர் அத்தியாவசிய சேவையின் நிமித்தமே சென்றுள்ளதுடன், இதன்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்ட 213 பேருக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (4)


# கொழும்பில் டெங்கு!

(கொழும்பு)

கடந்த 15 நாட்களில் நாடு பூராகவும் 430 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனரென தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தில் இனம் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

இதற்கமைய, 15 நாட்களில் கொழும்பில் 150 பேர் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனரென்றும் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 7ஆயிரத்து 317 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளதுடன், இந்த வருடத்தின்



இதுவரையான காலப் பகுதிக்குள் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகம் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனரென்றும் தெரிவித்துள்ளார். (4)

## பூஸா சிறைக்கைதிகள் 36 பேருக்கு தொற்று

(கொழும்பு)

பூஸா சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 36 கைதிகளுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.


காலி மற்றும் களுத்துறை மாவட்ட நீதிமன்றங்களின் விளக்கமறியல் உத்தரவுக்கமைய, 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்ட கைதிகள் 36 பேருக்கே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு 98 கைதிகள் தனிமைப்படுத்தப்பட்டிருந்ததாகவும் அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போது, 36 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2314

**ஜான்சி**

நாம் யாருக்காக வாழ்கிறோம் என்று நமக்குத் தெரியும்... ஆனால் நமக்காக யார் வாழ்கிறார்கள் என்று நமக்குத் தெரிவதில்லை- வாழ்வின் ரகசியம்



**வித்யா**

உறவுகளைத் தேர்ந்தெடுப்பதில் கவனமாக இருங்கள்... ஏனென்றால் உங்கள் நிம்மதியைத் தேர்ந்தெடுப்பது அவர்கள்தான்




**சுந்தர்**

அன்பிற்கான பாடத்தை நாய்களிடம் கற்றுக்கொள்... துரோகத்திற்கான பாடத்தை மனிதர்களிடம் கற்றுக்கொள்...



**சரோ**

வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமானால் நல்ல நண்பர்கள் தேவை... ஆனால் வாழ்நாள் முழுவதும் வெற்றிபெற வேண்டுமானால் ஒரு எதிரியாவது தேவை



**வினோ**

நீ ஆசைப்பட்ட வாழ்க்கையை உன் இஷ்டம்போல் வாழ்ந்துவிடு... பிறர் சொல்லைக்கேட்டு உன் ஆசைகளை அடமானம் வைத்துவிடாதே.பின்பு மீட்க முடியாது உன் வாழ்வில் நீ தொலைத்த ஆசைகளை



**பிரதீபன்**

விருப்பத்திற்கும் நேசத்திற்கும் வேறுபாடு உண்டு. பூக்களை விரும்புபவர்கள் பறித்து சூடுகிறார்கள் பூக்களை நேசிப்பவர்கள் செடிக்கு தண்ணீர் ஊற்றுகிறார்கள்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.சி.ஆர்.மேற்கொள்ளாது திருப்பி அனுப்பினால் கடும் நடவடிக்கை

(கொழும்பு)

**பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வருபவர்களிடம் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பினால், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தளபதியும் கொவிட் கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**



மருத்துவமனை ஒன்றுக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்குச் சென்ற ஒருவரை அங்கு வெளி நோயாளர் பிரிவில் கடமையிலிருந்த மருத்துவர் திருப்பி அனுப்ப முயன்றுள்ளார்.

தொற்றாளர்களுடன் முதல்நிலை தொடர்பில்லாதவர்கள் பி.சி.ஆர். பரிசோதனை செய்யத் தேவையில்லை என்றும் காரணம் கூறியுள்ளார்.

தனக்கு அறிகுறிகள் தென்படுவதால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று கூற, வேறு வழியில்லாமல் மாதிரிகள் பெறப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவத் தளபதியிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போது,

பி.சி.ஆர்.பரிசோதனைக்கு வருபவர்களைத் திருப்பி அனுப்பக் கூடாது. இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுமாக இருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நாம் நிச்சயம் நடவடிக்கை எடுப்போம்.


பி.சி.ஆர்.பரிசோதனைக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். இதே வேளை நாடு முழுவதும் பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம் பெறும் அதேவேளை, கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவித்தார். (4)

# இந்திய வைரஸின் மாறுபாடு கொழும்பில் கண்டறிவு

(கொழும்பு)

இந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட கொரோனா மரபணு வரிசை முறையின்போது கொழும்பில் ஒரு தனியார் வைத்திய சாலையால் அனுப்பப்பட்ட ஒரு மாதிரியில் கொரோனா வைரஸின் இந்திய மாறுபாடு கண்டறியப்பட்டுள்ளது.

ஆங்கில ஊடகம் ஒன்றே இதனைத் தெரிவித்துள்ளது.



இந்த மாதிரி வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவரிடமிருந்து எடுக்கப்பட்டதாக ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத் துறையின் தலைவர் பேராசிரியர் நீலிகா மாலவிகே கூறியுள்ளார்.

பேராசிரியர் மாலவிகேயின் ஆய்வகமே மரபணு வரிசை முறைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

## தடுப்பூசி வழங்கப்படவில்லை

# ரயில்வே தொழிற்சங்கங்கள் நேற்று திடீர் பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

போக்குவரத்தை எளிதாக்க கூடுதல் பேருந்துகளை சேவையில் இணைத்துள்ளதாக பயணிகள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

ரயில்வே தொழிற்சங்கங்களின் திடீர் பணிப்புறக்கணிப்பையடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தங்களுக்கு கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து ரயில் ஓட்டுநர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் சங்கங்கள் நேற்றுக் காலை முதல் திடீரென நாடு தழுவிய பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டன.

இதன் விளைவாக, ரயில் சேவைகள் திடீரென நிறுத்தப்பட்டதாகவும் பயணிகள் சிரமத்திற்கு ஆளாகாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவே மேலதிக பேருந்துகளை சேவையில் இணைத்ததாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

பின்னர் ரயில்வே ஊழியர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படும் என உறுதி வழங்கப்பட்டதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நல்ல நண்பர்கள் (நூலகங்கள்)

ஒரு நண்பர் இருக்கின்றார். எப்பொழுது பார்த்தாலும் கையில் ஒரு புத்தகம் இருக்கும். புத்தகம் இல்லாமல் எங்கேயும் புறப்படமாட்டார். எதற்காக இப்படி எடுத்துக் கொண்டு போகின்றீர்கள்? என்று கேட்டால்...எனக்கு இது ஒரு நண்பன் மாதிரி. இந்தக் காலத்தில் எங்கே போனாலும் காத்திருக்க வேண்டியிருக்கு. அதுமாதிரி சமயத்தில் நான் இந்த நண்பன் கூட பேசிக் கொண்டிருப்பேன் என்பார்.

ஒருத்தர் ஒரு பெரிய அரச பதவியில் இருந்தார். அந்தப் பதவியிலிருந்து இறங்க வேண்டிய சூழ்நிலை. அரசு கொடுத்திருந்த வீட்டை விட்டு வெளியே வருகின்றார். வரும்போது இரண்டு கையிலேயும் இரண்டு பெட்டியை எடுத்துக் கொண்டு வந்தார்.

சேர்... உங்களுடைய உடைமைகள்? என்று கேட்கின்றார்கள் அங்கே இருந்த ஊழியர்கள். அவர் தன் கையில் உள்ள பெட்டியைக் காட்டி...இதுதான் என்னுடைய சொத்து என்கின்றார். ஒரு பெட்டியில் அவருடைய உடைகள். இன்னொரு பெட்டியில் அவர் விரும்பிப் படிக்கின்ற புத்தகங்கள்... அவ்வளவு தான். புத்தகம் படிக்கிறது மனதுக்கு நல்லது என்பது நமக்குத் தெரியும். புத்தக வாசிப்பு-உடம்புக்கும் நல்லது என்பது அது நமக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கு. ஒருத்தருக்கு இரத்த அழுத்தம் 140/80 என்று இருக்கின்றதாக வைத்துக் கொள்வோம். அவரிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொல்லி கொஞ்ச நேரம் கழித்து இரத்த அழுத்தத்தை சோதனை செய்து பார்த்தால் அது குறைந்திருக்கும் என்று சொல்கின்றார்கள். ஒரு நபர் ஓராண்டுக்குச் சராசரியாக 2000 பக்கங்களைப் படித்திருக்க வேண்டுமாம். இது யுனெஸ்கோ பரிந்துரை. ஆனால் எங்கள் நாட்டில் நாம் சராசரியாக படிக்கின்றது 32 பக்கங்கள் அவ்வளவுதான். இவ்வளவுக்கும் எங்கள் நாட்டில் 6000 இற்கும் மேற்பட்ட நாளேடுகள். 2000 இற்கும் மேற்பட்ட இதழ்கள், மலர்கள் இவ்வளவு இருந்தும் சரியா வரவில்லை.

இந்த உலகத்தில் முதல் நூலகம் எங்கே, எப்பொழுது ஆரம்பமாகியது தெரியுமா கி.மு. 2500 ஆம் ஆண்டிலே தான் அது ஆரம்பமாயிற்று. பாபிலோனியாவில் அமில் அனு என்கின்ற அரசன்தான் நூலகத்தை உருவாக் கினான். அப்பொழுதெல்லாம் தாள் கிடையாது. களிமண் தான். களிமண் பலகைகளில் எழுதி, அதைத் தொகுத்து நூலாக்கி அந்த நூலகத்தில் வைத்திருந்தார்களாம்.

அரசரின் நூலகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் இருந்ததாக வரலாற்றுக் குறிப்பு தெரிவிக்கின்றது. அதுமட்டுமில்லை...அந்த நூலகத்தில் பொருள் வாரியாக Subject புத்தகங்களை வகைப்படுத்தி வைத்திருந்தார்களாம்.

அதிலே மிச்சமிருந்த ஒரு 25 களிமண் பலகைப் புத்தகங்கள் இன்றைக்கும் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் இருக்கு தாம்.

அச்சு, தாள் இவையெல்லாம் ஏற்பட்ட பின்பு அமைக்கப்பட்டது தான் பிரான்ஸிலே உள்ள பாரிஸ் நூலகம். 1480 இலே பிரெஞ்சு மன்னர் 11 ஆம் லூயி இந்த நூலகத்தை அமைத்தாராம். ஆனால் அப்பொழுதெல்லாம் அரசர்கள் மட்டும் தான் நூலகத்தைப் பயன்படுத்த முடியுமாம். அதற்குப் பின்பு 17 ஆம் நூற்றாண்டிலே இந்த முறை மாறி பொதுமக்களும் அங்கே போகலாம், படிக்கலாம் என்கின்ற நிலைமை வந்தது. போட்லியன் நூலகம் என்று அதற்குப் பெயர். பாரிஸ் நகரத்தில் இருக்கிறது. அங்கே தான் நூல்களின் பட்டியல் தயாரிப்புப் பணி ஆரம்பமாயிற்று.

கல்வி வளர்ச்சியையும் நூலகத்தையும் இணைத்தவர் நெப்போலியன் போனபார்ட். முன்பணம் செலுத்தி புத்தகத்தைப் படிக்கின்ற முறையையும் அவர் தான் கொண்டு வந்தார்.

மக்களிடம் வசூலிக்கின்ற வரியின் ஒரு பகுதியை நூலகத்திற்கு பயன்படுத்தியவரும் அவர்தானாம். நெப்போலியன் நூலகத்தில் உலகத்தில் உள்ள எல்லா மொழி நூல்களும் உண்டாம். அங்கே ஒரு தமிழ் நூலும் இருந்திருக்கிறது. அது கம்பராமாயணம். சோவியத் யூனியனுக்குப் படையெடுத்துப் போன பின்பு அங்கேயிருந்து இலட்சக்கணக்கான புத்தகங்களை ஸ்லெட்ஜ் என்கின்ற பனிச் சறுக்கு வாகனங்களில் கொண்டு வந்ததாக வரலாறு. அடுத்தபடியாக குறிப்பிடத்தக்க நூலகம் பிரிட்டிஷ் நூலகம். மிகப்பழைய கையேட்டுப் பிரதியெல்லாம் அங்கே உண்டாம். 1753 இல் ஆரம்பமாகியது.

அதிலே உள்ள நூல்களை வரிசையாக அடுக்கினால் 180 கி.மீ. நீளத்திற்கு வருமாம். மிகப் பெரிய நூலகம் அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் இருக்கிறதாம். இந்தியாவைப் பொறுத்த வரைக்கும் பெரிய-பழைய நூலகம் கொல்கத்தா நூலகம்.

எல்லா இந்திய மொழி நூல்களும் இங்கே உண்டு. மகாகவி பாரதியார் நடத்திய இந்தியா என்கின்ற இதழின் எல்லாப் பிரதிகளும் அங்கே பாதுகாப்பாக இருக்கின்றது. படிக்கும் பழக்கம் இங்கே வளர வேண்டியிருக்கு. ஒருத்தரிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்து விமர்சனம் எழுதச் சொல்லியிருந்தார்கள். சிறிது நாள் கழித்து அவரைப் போய் பார்த்து என்னாங்க... புத்தகத்தைப் படித்துப் பார்த்தீர்களா? என்று கேட்டார்கள். இதற்கு அவர் இன்னும் இல்லை. இப்பொழுதுதானே விமர்சனமே எழுதி முடித்திருக்கின்றேன் என்றாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 40 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இவ் வாகனம் மூலம் முன்பள்ளிகள், பாடசாலைகள், சிறுவர் இல்லங்கள், வயோதிபர் இல்லங்கள் என்பவற்றிற்குச் சுழற்சி முறையில் 3500 நூல்கள் வரையில் எடுத்துச் செல்லப்பட்டு இச் சேவை வழங்கப்படுகிறது. இவ் வாகனத்தில் நூல்கள் வைக்கக்கூடிய வகையில் இறாக்கைகள் வடிவமைக்கப்பட்டு உள்ளன.

**"யாழ்.பொதுநூலகம் அதன் சாம்பலில் இருந்து எழுகின்றது" நூலின் எழுத்தாளர் பற்றி....**


இலங்கையின் ஒரு புகழ் பெற்ற கட்டடக் கலைஞரான வி.எஸ். துரைராஜா (8.8.1927 - 14.12.2011) "யாழ்.பொது நூலகம் அதன் சாம்பலில் இருந்து எழுகின்றது" (The Jaffna Public Library Rises From Its Ashes) என்ற நூலை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். பல அரிய படங்கள், வரைபடங்கள், தகவல்கள் அடங்கிய இந்த நூல், 2008 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூல் காவலூர் ராசதுரையினால் தமிழில் மொழிபெயரக்கப்பட்டு 2009 இல் வெளியிடப்பட்டது.

இவர் தமிழ்த்திரைப்படத் தயாரிப்பாளரும், தமிழ் ஆர்வலரும் ஆவார். கட்டடக்கலை தொடர்பான பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

இலங்கையின் பல இடங்களிலும் உள்ள பல்கலைக்கழகங்கள், மருத்துவமனைகள், கோயில்கள், மற்றும் முக்கிய அமைவிடங்கள் இவரது கைவண்ணமாக அமைந்திருக்கின்றன. இவை தவிர இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள், அவுஸ்திரேலியா உள்ளிட்ட இடங்களிலும் இவர் பல கட்டடங்களை அமைத்துக் கொடுத்துள்ளார். ஈழத்து திரைப்படமான குத்துவிளக்கு இவரது தயாரிப்பில் வெளிவந்தது.

1951 இல் பொதுப் பணித்துறை அமைச்சில் கட்டடக்கலைஞராகப் பணியைத் தொடங்கினார்.

அரசு உத்தியோகத்தர்கள் அனைவரும் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற கட்டாயம் அப்போது இருந்ததால், துரைராஜா அரசுப் பணியில் இருந்து விலகி, 1964 ஆம் ஆண்டில் துரைராஜா அசோசியேட்ஸ் என்ற கட்டட வடிவமைப்பு ஆலோசக நிறுவனத்தை ஆரம்பித்து நிர்வகித்து வந்தார்.



ஆறு மாடிகள் கொண்ட வீரசிங்கம் மண்டபம், நவீன சந்தைக் கட்டடம், விளையாட்டரங்கம், தந்தை செல்வா நினைவுத்தூபி, யாழ்.பல்கலைக்கழகக் கட்டடங்கள் போன்ற பல கட்டடங்களை வடிமைத்துள்ளார். இவர் தனது "யாழ். பொது நூலகம் அதன் சாம்பலில் இருந்து எழுகின்றது" என்ற நூலின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

யாழ்ப்பாணப் பொதுசன நூலுகத்துடன் எனக்கு தொடர்பு ஏற்பட்டமை 1959 ஆம் ஆண்டு அது புதிய கட்டடத்துள் குடிபுகுந்தபோதே ஆகும். அந்தக் காலத்தில் நான் மாணவனாக இருந்தேன். அங்கு கிரமமாகப் போய் பல்வேறு வகையான நூல்களை எடுத்துப் பயன் பெற்றேன். இளம் கட்டடக் கலைஞனான எனக்கு அதன் வடிவமைப்பு வியப்பையும் மகிழ்ச்சியையும் தந்தது. ஏனெனில், இக்கட்டடம் புராதன திராவிடக் கலை அம்சங்களுடன் நவீன கட்டட நுட்பங்களையும் ஒருங்கிணைத்து நயத்துடன் கட்டப்பட்டிருந்தமை.

1981 ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி இந்த நூலகத்துக்குத் தீவைக்கப்பட்டதென்பதைக் கேள்விப்பட்டதும் நான் திகைப்பும் துயரமுமடைந்தேன். அப்போது தீக்கிரையான கட்டடத்துக்குப் பின்புறமாக அதேபோன்ற கட்டடமொன்றை அமைக்க வேண்டுமென்று மாநகரசபை முடிவு செய்து என்னை அழைத்தபோது நான் பெரும் ஆறுதலடைந்தேன். இந்தக் கட்டட வேலை 1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முற்றுப் பெற்றது. ஆனால் 1985 ஆம் ஆண்டு மறுபடியும் யுத்தம் வெடித்தது; மீண்டும் நூலகத்துக்கு துன்பம் சூழ்ந்து கொண்டது. புதிய கட்டடத்துடன் பழையதும் சேர்ந்து பெரும் சேதத்துக்குள்ளாயின.

பல ஆண்டுகள் கழித்து 1997 ஆம் வருடம், சேதமுற்ற கட்டடத்தைப் புனரமைக்க அரசாங்கம் முன்வந்தது. நூலகத்தை தேசிய நூலகமாக உயர்த்துவதென்று முடிவெடுத்தது. என்னை அதற்கான வடிவமைப்பை உருவாக்கும்படி பணித்தது. திட்டமும் செலவும் தயாராகின. ஆனால் இந்தப் பணி நடைபெறவில்லை.

1999 ஆம் ஆண்டில், அரசாங்கம் சேதமுற்ற கட்டடத்தை மாத்திரம் புனரமைக்கத் தீர்மானித்தது. என்னை அதற்கான வடிவமைப்பைத் தயாரிக்குமாறு கேட்டுக் கொண்டது. எனது வரைபடங்களுக்கமைய கட்டட வேலை 2000 ஆம் ஆண்டு ஆரம்பமாகி 2002 ஆம் ஆண்டில் முற்றுப்பெற்றது.

இந்நூலை நான் எழுத எத்தனித்ததன் காரணம், எமது மதிப்புக்குரிய நூலகத்தின் துயரம் நிறைந்த வரலாற்றைப் பதிவு செய்வதற்காகவே. இந்நூலகம் எவ்வாறு ஒரு வீட்டின் சிறிய அறையில் ஆரம்பித்து எப்படி தென்கிழக்காசியாவிலேயே மிகச் சிறந்த நூலகமாக வளர்ந்தது, எவ்வாறு அது தாங்கிய மீட்டெடுக்க முடியாத கருவூலங்கள் தீக்கிரையாக்கப்பட்டன, எவ்வாறு அதன் சாம்பலிலிருந்து அது எழுந்தது என்பவற்றை இந்நூல் தொகுத்துச் சொல்கிறது. 2007 ஆம் ஆண்டில் யுத்த மேகங்கள் சூழ்ந்த நிலையில், எம் பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கு என்னவாகுமோ என்று நினைக்கும் போதே அச்சம் தருகிறது.

இந்த நூல், இப்படியானதொரு அறிவுச்சுரங்கம் எம் மத்தியில் இருந்ததென்பதற்கு ஆதாரமாக ஏதாவதொரு தொல் ஆவணக் காப்பகத்தின் ஒரு மூலையிற் கிடக்குமென்று நம்புகிறேன். யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் அதன் சாம்பலிலிருந்து எழுந்து பழைய புகழுடன் திகழலாம். ஆனால் அதனுள் அடங்கியிருந்த அரிய நூல்களையும் ஆவணங்களையும் மீளப்பெறலாமா? இவ்வாறு நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சீ. வீ.கே. சிவஞானம் (முன்னாள் மாநகரசபை ஆணையாளர்) அவரின் நூலுக்கு வழங்கிய ஆசியுரையில் "வி.எஸ்.துரைராஜா கட்டடக் கலையில் கைவந்தவர் என்பது மட்டுமன்றி பொதுச் சேவையிலும் ஆர்வம் கொண்டவர் என்பதை நேரில் கண்டேன். அவர் பொது நூலகக் கட்டடம் கட்டி முடியும் வரை எம்மோடு கூட இருந்து, 1984 ஆம் ஆண்டு ஜூன் 4 ஆம் திகதியில் அதன் திறப்பு விழாவிலும் பங்கு பற்றினார். மக்களால் தெரிவு செய்யப்பெற்ற சபையொன்று இல்லாததால், நானே 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து யாழ்ப்பாண மாநகர சபையை நிர்வகித்து வந்ததுடன், நூலகக் கட்டட வேலையையும் நிர்வகிக்க வேண்டி இருந்தமையால், வி.எஸ். துரைராஜா ஒரு சதம் கூட வாங்காமல் தொழில் சார்ந்த சேவைகளைத் தந்துதவியதுடன் ஆலோசனைகளையும் தந்தமைக்காக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் பற்றி வி.எஸ்.துரைராஜா இந்நூலகத்தில் அவரது ஈடுபாட்டையும் அறிவையும் கொண்டு எழுதும் ஆவணம் எமது வருங்கால சந்ததிக்கு பெறுமதிமிக்க வரலாறாக இருக்குமென்பது எனது தெளிவான அபிப்பிராயமாகும் என்று கூறியுள்ளார்.

**யாழ்ப்பாணப் பொதுமக்கள் நூலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு நூல் பற்றி சில வரிகள்......**

யாழ்ப்பாணப் பொதுமக்கள் நூலகம் எரியூட்டலின் 20 ஆவது ஆண்டு நிறைவின் போது அதன் வரலாற்றுத் தொகுப்பை எழுதிப் பிரசுரித்திருக்கின்றார். என்.செல்வராஜா இந்த நூலகம் எரியூட்டலின் 20 ஆவது வருடப் பூர்த்தியை நினைவுகூரும் வண்ணமாக வெளியிட்டு இருக்கின்றார். என். செல்வராஜா யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த நூலகமாகிய "ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின்" நூலகராகச் சேவை செய்தவர்.

இவர் தொகுத்து அளித்திருக்கும் வரலாற்றுத் தொகுப்பு ஆவணப் புதையலாக இந்த நூல் விளங்குகின்றது. 127 பக்கங்களைக் கொண்ட இந்த நூலில் யாழ்ப்பாணப் பொது நூலகம் பற்றியும் அதன் அழிவு பற்றியும் பொது நூலகத்தின் சேவையின் சிறப்பும் பெருமையும் பற்றியும் கட்டுரைகள் காணப்படுகின்றன. இந்தக் கட்டுரைகளை நூலகர் செல்வராஜா பல்வேறு சஞ்சிகைகளில் இருந்தும் பத்திரிகைகளில் இருந்தும் தேடித் தொகுத்துள்ளார்.

இத்தொகுப்பில் 45 கட்டுரைகள் காணப்படுகின்றன. அவற்றிலே 14 ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. எச்.ஏ.ஐ.குணத்திலக்கா, நடேசன் சத்தியேந்திரா, பேராசிரியர் நேசையா, வீ.எஸ்.துரைராஜா என்பவர்களின் ஆங்கிலக் கட்டுரைகள் இந்நூலுக்கு அணி செய்கின்றன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருட்களின் விலை அதிகரிக்க வாய்ப்பில்லை - பந்துல

(கொழும்பு)

**பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை எந்தவித மான தட்டுப்பாடும் இன்றி விநியோகிக்கும் பொறிமுறைக்கு அனைத்து தரப்பினரினதும் ஒத்துழைப்பு கிடைப்பதாக வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

நாடு முழுவதுமுள்ள மொத்த விற்பனை வர்த்தகர்களுக்கு புறக்கோட்டை மொத்த வர்த்தக சந்தைக்கு வருவதற்கும் பொது மக்களுக்கு விநியோகிப்பதற்குத் தேவையான பொருட்களை பெற்றுக்கொள்வதற்கும் தேவையான அனுமதிப் பத்திரத்தை வழங்கி பொருட்களை விநியோகிக்கும் பொறிமுறையைத் தடையின்றிச் செயற்படுவதற்கும் புறக்கோட்டை மொத்த வர்த்தக சந்தை மற்றும் மாவட்ட செயலகங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

மேலும் இவ்வாறான இக்கட்டான நிலையில் பொருட்களின் விலையை அதிகரிக்க இடமளிக்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.


வர்த்தக சங்கத்துடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய தற்போதைய விலை அமுலில் இருக்கும் எனவும் வர்த்தகத்துறை அமைச்சர் கூறினார். (4-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரதமுறைகள்



## விரதங்கள்

## துன்பங்களை போக்கும் பைரவர் விரதம்



(தொடர்ச்சி)

தட்சன் யாகம் நடத்தியபோது சிவனை அழைக்காமல் அவமதித்தான். இதையடுத்து தட்சனின் மகளான பார்வதிதேவி அவன் நடத்திய யாக குண்டத்தில் விழுந்து உயிர் விட்டாள்.

இதையடுத்து ஈசன் தாட்சாயணியின் உடலைக் கைகளில் ஏந்தியபடி ஆவேசத்துடன் அங்கும் இங்கும் அலைந்தார். அப்போது மகாவிஷ்ணு தன் சக்கராயுதத்தால் தேவியின் உடலை பல கூறுகளாக்கினார்.

அது பூமியில் பல இடங்களில் விழுந்தது. ஒவ்வொரு இடமும் சக்திப் பீடங்களாயின. அவற்றுக்கு பைரவரே பாதுகாவலாக இருப்பதாக புராணங்கள் கூறுகின்றன.

ஒரு சமயம் அந்தாகாசுரன் என்ற அரக்கனை அழிப்பதற்காக சிவன் பைரவரைத் தோற்றுவித்ததாகவும் அவர் விஸ்வரூபம் எடுத்து அறுபத்து நான்கு வடிவில் அரக்கர்களை அழித்ததாகவும் புராணங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் தற்போது எட்டு பைரவர்களை மட்டுமே வழிபடும் முறை உள்ளது.

அஷ்ட பைரவர்கள் அவர்கள் சக்தி பெயர்கள்:- அசிதாங்க பைரவர் (பிராம்ஹி), குரு பைரவர் (மகேஸ்வரி), சண்ட பைரவர் (கௌமாரி), குரோதான பைரவர் (வைஷ்ணவி), உன்மத்த பைரவர் (வராகி), கபால பைரவர் (மகேந்திரி), பீஷண பைரவர் (சாமுண்டி), சம்ஹார பைரவர் (சண்டிகாதேவி).

பைரவரை வழிபட ஒவ்வொரு மாதமும் அஷ்டமி திதி சிறந்தது. அன்று அஷ்டலட்சுமிகளும் பைரவரை வழிபடுவதாக ஐதிகம். அன்றைய தினம் பைரவரை வழிபட்டால் பொன், பொருள், ஐஸ்வரியம், சுகம் அனைத்தையும் அடையலாம்.

**தம்பதி பைரவர்**

வாழ்க்கையில் வறுமை அகன்று செல்வச் செழிப்போடு வாழ்வதற்கு அருள்பவர் ஸ்ரீஸ்வர்ணாகர்ஷண பைரவர். இவரை வடக்குத் திசை நோக்கி அமர்ந்து வழிபடுவது சிறப்பு.

இவர் அமர்ந்த நிலையில் தன் மடியில் பைரவியை அமர்த்திக் கொண்டு ஒரு கரத்தில் அமுத கலசமும் ஒரு கரத்தில் சூலமும் ஏந்தி வைர கிரீடம், பட்டு வஸ்திரம் அணிந்து தம்பதி சமேதராய் காட்சி அளிக்கிறார்.

இவரை அஷ்டமி திதி மற்றும் பௌர்ணமி நாளில் வழிபடலாம். மேலும் வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் வணங்கினால் சகல சம்பத்தும் பொன்பொருளும் கிடைக்கும்.

அஷ்டமியில் பஞ்சதீபம் ஏற்றி வழிபட்டால் காலத்தினால் தீர்க்க முடியாத தொல்லைகள் நீங்கும். இலுப்பை எண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், பசு நெய் இவற்றினைத் தனித்தனியாக அகல் தீபமாக ஏந்திவர நற்பலன் கிட்டும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## எமனாக மாறிய ஊஞ்சல் கயிறு

(கொழும்பு)

வீட்டுக்கு அருகில் உள்ள மரத்தில் கட்டப்பட்டிருந்த ஊஞ்சல் கயிற்றில் கழுத்து இறுகி இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். இச்சம்பவம் முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதுரங்குளி வேலுசுமனபுர பிரதேசத்தில் இடம்பெற்றதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏ.சஞ்ஜீவ சம்பத் (வயது-27) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். (4)

## மனைவியை அடித்துக் கொன்ற கணவன்

(கொழும்பு)

மகரகம பகுதியில் கணவன்-மனைவிக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் கணவன் மனைவியை அடித்துக் கொலை செய்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் தலையில் பலமாகத் தாக்கப்பட்ட பெண் சிகிச்சைக்காக களுபோவில போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டபோது நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக மகரகம பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பெண்ணின் கணவரான 36 வயது நபரை பொலிஸார் கைது செய்தனர். (4)

## மேலும் 70 பிரிவுகள் முடக்கம்

(கொழும்பு)

நாட்டில் 10 மாவட்டங்களைச் சேர்ந்த மேலும் 70 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார். (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 140 | 70 | 150 |
| தக்காளி | 240 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 140 | 120 | 120 |
| கரட் | 150 | 170 | 200 |
| பூசணி | 40 | 45 | 40 |
| புடோல் | 100 | 130 | 80 |
| வாழைக்காய் | 40 | 40 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 220 | 320 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 160 | 200 | 150 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 160 | 130 | 150 |
| பயற்றங்காய் | 120 | 100 | 50 |
| லீக்ஸ் | 160 | 130 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 120 |
| கறிமிளகாய் | 140 | 100 | 160 |
| முருங்கைக்காய் | 500 | 450 | 500 |
| போஞ்சி | 180 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 60 | 60 | 40 |
| தேசிக்காய் | 160 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 260 | 200 | 250 |
| வெங்காயப்பூ | — | — | 280 |
| முள்ளங்கி | 100 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 30 |
| ஈரப்பலா | — | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் பாதுகாப்புக் குழுவை மீண்டும் இயங்க வைக்க வேண்டும்

## நகரசபை உப தவிசாளர்

(சாவகச்சேரி)

**சமூகத்தில் மீண்டும் சிவில் பாதுகாப்பு விழிப்புக் குழுவினை அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளர் அ.பாலமயூரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

அண்மையில் பொலிஸாரின் பங்குபற்றுதலுடன் சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் கொரோனா காரணமாக ஏற்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு வேளைகளில் களவு, கசிப்பு உற்பத்தி போன்ற சட்டவிரோதச் செயற்பாடுகள் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் இடம்பெற்றிருந்தன.

இதன் காரணமாக பொலிஸாரின் அனுமதி பெற்று கிராம மட்டத்தில் உள்ள இளைஞர்களை ஒன்றிணைத்து சிவில் பாதுகாப்பு குழுவினை அமைத்து சமூகத்தில் இடம்பெற்ற சட்டவிரோதச் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டன.

தற்போது மீண்டும் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இவ்வாறான களவு, கஞ்சா, கசிப்பு உற்பத்தி வியாபாரம் என்பன தலைதூக்குகின்றன. எனவே மீண்டும் சிவில் பாதுகாப்புக் குழுவினை முழுமையாக இயங்க வைக்க உயிரூட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-6-30)



வயாவிளான் தனிமைப்படுத்தல் மையத்தில் வெளிநாடுகளிலிருந்து வந்த தனிமைப்படுத்தப்பட்டிருந்த 235 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து கடந்த 12 ஆம் திகதி பரிசோதனையின் பின் தமது வீடுகளிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# சித்தன்கேணியில் வாள் முனையில் திருட்டு

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சித்தன்கேணிப் பகுதியில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், குறித்த பகுதியிலுள்ள வீடொன்றில் 76 மற்றும் 80 வயது மதிக்கத்தக்க இரு வயோதிபப் பெண்கள் வசித்து வந்த நிலையில் நேற்று அதிகாலை இனந்தெரியாத இருவர் வாளுடன் மோட்டார் சைக்கிளில் வந்து வீட்டில் இருந்தவர்கள் அணிந்திருந்த தோடு மற்றும் மோதிரங்கள் என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

குறித்த பெண்கள் எழுப்பிய சத்தத்தைக் கேட்டு அயலவர்கள் வந்தபோது திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (5-6-104)

# தப்பித்தனர் மணல் கொள்ளையர்கள்; சிக்கியது உழவு இயந்திரம்

(நல்லூர்)

தென்மராட்சிப் பகுதியில் சட்டவிரோத மணல் கொள்ளையில் ஈடுபட்டவர்களை இராணுவத்தினர் சுற்றி வளைத்த போது உழவு இயந்திரத்தை கைவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தென்மராட்சி கெற்பேலி பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் மணல் கொள்ளை இடம்பெறுவதாக இராணுவத்தினருக்கு தகவல் கிடைக்கப் பெற்றது. அத்தகவலை அடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற இராணுவத்தினர் அவர்களை சுற்றி வளைத்து பிடிக்க முற்பட்ட போது கொள்ளையர்கள் உழவு இயந்திரத்தை அவ்விடத்தில் கைவிட்டு விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இராணுவத்தினரால் கொடிகாம பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் உழவு இயந்திரத்தை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதுடன், விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர். (5-6-33)

# தனிமைப்படுத்தல் விதியை மீறியவர்களுக்கு வழக்கு தாக்கல்

(நெளுக்குளம்)

வவுனியா சாந்தசோலை பகுதியில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய இருவர் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் குறித்த பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு அண்மையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த நபரின் குடும்பத்தினர் மற்றும் அவருடன் நேரடி தொடர்பினைப் பேணிய அயல் வீட்டைசேர்ந்த இருவரும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அயல் வீட்டினைச் சேர்ந்த இருவரும் தனிமைப்படுத்தல் விதிகளை மீறி வெளியில் உலாவித் திரிந்துள்ளனர். இது தொடர்பாக சுகாதார அதிகாரிகளிற்கு தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் குறித்த விடயம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்ததுடன், பொலிஸாருக்கும் தெரியப்படுத்தினர்.

அத்துடன் தனிமைப்படுத்தல் காலம் நிறைவு பெற்றதன் பின்னர் சட்ட நடவடிக்கையினை முன்னெடுக்குமாறு பணித்தனர். (8-4-299)

# கிளிநொச்சியில் புதிய கொரோனா மருத்துவமனை

(முறிகண்டி)

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் புதிய கொவிட்-19 மருத்துவ நிலைய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பரந்தன் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம் ஒன்றே இவ்வாறு கொவிட்-19 சிகிச்சை நிலையமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தினால் அமைக்கப்பட்டுள்ள குறித்த சிகிச்சை நிலையமானது 200 படுக்கை வசதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள குறித்த கொவிட்-19 சிகிச்சை



நிலையமானது நேற்று முதல் பணிகளை ஆரம்பிக்கத் தயாராக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சிகிச்சை நிலையமானது கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்படவுள்ளது. இதன் பணிகள் நிறைவுற்ற நிலையில் கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் கரேந்திர ரணசிங்க, வைத்தியர்கள், இராணுவ உயரதிகாரிகள் ஆகியோர் குறித்த வைத்தியசாலையை பார்வையிட்டதுடன், பணிகளை ஆரம்பித்தனர். (8-4-100-315)

# வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(பனிக்கன்குளம்)

ரவிகரன், சிவாஜிலிங்கம் உள்ளிட்ட நால்வர் மீதான வழக்கு விசாரணை கொவிட்-19 அசாதாரண சூழ்நிலையால் ஒக்டோபருக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணியினை அபகரிக்கச் சென்ற நில அளவீட்டாளர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கோட்டாபய கடற்படை முகாமிற்கு முன்பாக மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதனால் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட நால்வருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் விசாரணை 17.05.2021 ஆம் திகதி அன்றைய தினம் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றால் தவணையிடப்பட்டிருந்தது. இந்நிலையில் கொவிட்-19 அசாதாரண சூழ்நிலை காரணமாக முல்லைத்தீவு நீதிமன்றால் குறித்த வழக்கு விசாரணைகள் எடுத்துக் கொள்ளப்படாத நிலையில், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதிக்கு இந்த வழக்கின் விசாரணைகள் தவணையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-4-281)



பயணத்தடை முடக்க நிலையில் யாசகம் பெற்று வாழும் மக்களுக்கு நேற்று முன்தினம் வவுனியா ஊடகவியலாளர்களினால் மதிய உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்-சதீஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு கல்லின் அடியிலும் இறைவன் இருக்கிறார்!
- இயேசு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் இதயங்களில் குடியிருக்கும் எமதருமை உறவுகளே!

இன்று மே 18. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடும் போரில் எம் தமிழ் உறவுகள் துடிதுடித்துக் கொல்லப்பட்ட கொடுமை நடந்தேறி இன்று 12 ஆண்டுகள் நிறைவாயிற்று.

எனினும் எங்கள் உறவுகளின் நினைவுகள் காலம் கடந்து போகாமல் அப்படியே இருக்கின்றன.

ஓ! தமிழின அழிப்பாக நடந்த அந்தக் கொடுமை ஈழத் தமிழ் இனத்தின் வரலாற்றில் மறக்க முடியாதது.

எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கையேந்தி நின்ற தமிழ் மக்களை உதறித் தள்ளி விட்டு, உலகத் தொண்டு நிறுவனங்கள் திரும்பிப் பாராமல் ஓடிச் சென்றதை எம் நெஞ்சம் எப்படி மறக்கும்.

அந்தோ! நாடாளும் அரசு தன் நாட்டு மக்களை இனத்தின் பேரால் ஈனச் செயல் செய்து கொடும்பழிக்கு ஆளானது.

சிறுவர், முதியவர்கள், பெண்கள் என்று பாராமல் குடும்பம் குடும்பமாக முள்ளிவாய்க்காலில் கொன்றொழிக்கப்பட்ட எங்கள் உறவுகளை எம் இதயத்தில் இருத்தி வழிபடுகின்ற இந்த வேளையில், எம் இனத்துக்காக உங்கள் உயிரைக் கொடுத்த தமிழ் உறவுகளே!

உங்களுக்கு வஞ்சம் செய்த இந்தப் பார் இன்றுபடும் பாட்டை நீங்கள் நிச்சயம் பார்த்திருப்பீர்கள்.

அதோ! கொரோனாக் கிருமியோடு யுத்தம் நடத்த முடியாமல் உலக நாடுகள் பரிதவிக்கின்றன.

போராயுதம் இருந்தால் போதும் மனிதத்தைக் கொன்று மனிதனை வாழ வைக்க முடியும் என்று நினைத்த நாடுகள் இன்று எதுவும் செய்ய முடியாமல் அந்தரிக்கின் றன.

இந்த அவலம் இலங்கைக்கும் ஏன்? எங்களுக்கும் உரியதாயினும் நீங்கள் ஆற்றாது அழுத கண்ணீருக்கு உரியவர்கள் பதிலளிக்க வேண்டியது தவிர்க்க முடியாதது என்பதையே உலகில் நடக்கின்ற விசித்திரங்கள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

ஆம், அன்புக்குரிய எம் உறவுகளே!

உங்களை வஞ்சித்தவர்கள் என்றோ ஒருநாள் தண்டனை பெற்றே ஆவர்.

இப்போது இருக்கின்ற ஆட்சி வலிமையும் அதிகார பலமும் ஊதாரித்தன நாடுகளின் ஆதரவும் ஜெயித்தது போல், வெற்றியை அனுபவிப்பதுபோல் பிரமை கொடுக்கும்.

ஆனால் நிச்சயம் உங்கள் அழு கண்ணீர் மிகப் பெரும் படைக்கலமாய்த் திரண்டு உரியவர்களைச் சங்கரிக்கும்.

இது அறத்தின் பேரால் கூறப்படும் சத்திய வாக்கு.

உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும். உங்களின் ஆத்ம பலம் எங்கள் தமிழினத்தை நிச்சயம் காப்பாற்றும்.

எங்கள் இதயங்களில் நீங்கள் சங்கமமாய் என்றும் வீற்றிருப்பீர்கள்.

### எமது உரிமையை வெல்லும் நாளே

# முள்ளிவாய்க்காலில் சாகடிக்கப்பட்ட ஆன்மாக்கள் சாந்தியடையும்

## முன்னாள் எம்.பி சரவணபவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எம்மைநாமே ஆளும் உரிமையை வெல்லும் நாளே, முள்ளிவாய்க்காலில் சாகடிக்கப்பட்ட ஆன்மாக்கள் சாந்தியடையும். அந்த இலக்கை நோக்கி தளர்வின்றி - எந்தத் தளம்பலுமின்றி இலட்சிய வேட்கையுடன் ஆத்மார்த்தமாக உறுதி பூண்டு பயணிப்போம். இதை இந்தப் புனித நாளில் அந்த ஆன்மாக்கள் மீது சத்தியம் செய்து சொல்வோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் பேரவலம் இடம்பெற்று 12 ஆண்டுகள் பறந்து விட்ட நிலையிலும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடுகின்றோம்.

முள்ளிவாய்க்கால் எம் துயரத்தின் அடையாளம் அல்ல. எமது இலட்சிய வேள்வி மீது சத்தியம் செய்து இலக்கை அடைவதற்கான உரிமைப் போரைத் தொடங்கும் புள்ளி. இனியும் அழுது அழுது ஆற்றாமையால் துடிப்பதை விடுத்து முள்ளிவாய்க்காலில் கொன்று குவிக்கப்பட்ட எங்கள் அன்புறவுகளை மனதிலிருத்தி இலக்கை அடையப் புறப்படுவோம். அவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுப்போம். அந்த நீதியூடாக எங்களை நாங்களே ஆளும் உரித்தை அடைவோம். இன்றைய நாளில் ஒவ்வொருவரும் இதற்கு உறுதி பூணுவோம் என்றார். (ம-3)

## இளைஞர்களின் அதிரடியால் கசிப்பு பரல்கள் மீட்பு

(நெளுக்குளம்)

வவுனியாவின் எல்லைப்பகுதியான கல்மடு கண்டல்வேலி குளப் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடம் இளைஞர்களால் நேற்று முற்றுகையிடப்பட்டது.

குறித்த பிரதேசத்தில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தி இடம்பெற்று இடம்பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதியில் ஒன்றுகூடிய கிராம மக்கள் மற்றும் இளைஞர்கள் கசிப்பு உற்பத்தி செய்யும் இடத்தினை முற்றுகையிட்டதுடன், ஐந்திற்கும் மேற்பட்ட கசிப்பு பரல்களை மீட்டுள்ளனர்.

எனினும் கசிப்பினை உற்பத்தி செய்த நபர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-8-299)

### 14 இலட்சம் ரூபாய் பெறுமதியான

## கேரள கஞ்சா பொதிகள் மன்.பேசாலையில் மீட்பு

(மன்னார்)

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள மன்னார் பேசாலை 8 ஆம் வட்டாரம், யூட் வீதி காட்டு பகுதியில் மறைத்து வைத்திருந்த ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகளை பேசாலை பொலிஸார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா பொதிகள் 14 கிலோ 175 கிராம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த கஞ்சா பொதிகள் சுமார் 14 இலட்சம் ரூபாய் பெறுமதியானவை என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. கைப்பற்றப்பட்ட கஞ்சா மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளது. (ம-3,285)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து 5 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** வன்னிவைரம், பொன்னகர் பூவரசங்குளம், விநாயகபுரம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ரோட்மண்ட் எலக்ட்ரோ எலக்ரிக்கல், குருக்கள் புதுக்குளம், மணியர்குளம், மணியர் குளம் (வீட்டுத்திட்டம்), நித்திய நகர், ரங்கீத்கம, சுங்கராபுரம், வாரிக்குட்டி யூர் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** செம்மண்தீவு நெற்களஞ்சியம், அச்சம்குளம், அளவக்கை, அறுகுக்குன்று நொச்சிக்குளம், ஆவணம்வஞ்சியங்குளம், எருவிட்டான், மாவிலங்கேணி, நானாட்டான், நறுவிலிக்குளம், நானாட்டான் பிரதேச செயலக அலுவலகத்தடி, பள்ளங்கோட்டை, பிடாரிக்குளம், பூவரசங்குளம், சாளம்பன், நாகச்செட்டி, உமணகிரி, வாழ்க்கைப் பட்டாங்கண்டல், சிலாவத்துறை கடற்படை முகாம், ஹூனைஸ் நகர், கரடிக்குழி, காயக்குழி திட்டம், கொக்குப்படையான், கொண்டச்சி திட்டம், கொண்டச்சிநீர்வழங்கல் சபை, கொண்டச்சி சிங்கள கிராமம், கூழாங்குளம் திட்டம் (ஜீநாத் நகர்), மறிச்சுக்கட்டி, முள்ளிக்குளம், பாலைக்குழி, பாலைக்குழி திட்டம், தம்பட்டமுசலி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## உள்ளம் சொல்வதைக் கேள்

❖ கடவுளை அவருடைய அருளால் பார்க்க முடியும். கடவுள் நமக்கு அருகில் இருந்தாலும், தேடினால் மட்டுமே காணக்கூடியவராக இருக்கிறார்.

❖ உயர்ந்த மனநிலைக்கு ஒருவனை அழைத்துச் செல்வது அறிவாற்றலே. அப்போது இதயம் தெய்வீக நிலையை அடைகிறது.

❖ பண்புடையவர்களிடம் நம்பிக்கை, நேர்மை, பக்தி ஆகிய குணங்கள் தானாகவே வந்துவிடும். இந்த குணங்கள் உள்ளவர்களுக்கு எந்த ஆபத்தும் நிகழ்வதில்லை.

❖ உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய மூன்றையும் பெற்றுள்ள ஒருவனை, உலகமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு. அவன் எதிலும் வெற்றி பெறுவான்.

❖ அறிவு, உள்ளம் இவ்விரண்டில் எதைப் பின்பற்றுவது என மனதில் போராட்டம் எழும் போது, உள்ளம் சொல்வதையே பின்பற்றுங்கள். உள்ளமே மனிதனின் கண்ணாடியாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



வேம்படி மகளிர் கல்லூரியின்
முன்னாள் ஆசிரியை **சுதர்சினி**
அவர்களின் பாசமிகு தாயார்

## அமரர் பேனாட் லூசியன் செயமாலை அம்மா

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களை பெண் சாரணிய சங்கத்தின்
மூலமாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திருமதி நீ. தர்மகுலசிங்கம்**
**பெண் சாரணிய சங்கம், யாழ்ப்பாணம்.**

(6897)


## யாழ்.பல்...

நினைவேந்தலில் ஈடுபடலாம் எனப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருப்பதனால், பல்கலைக் கழகம் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும், பல்கலைக்கழகத்தைச் சுற்றிபடை யினர் குவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால்அந்தப் பகுதியில் பதற்றமான சூழ் நிலை காணப்படுகிறது.

தீவிர கண்காணிப்பை மீறிச் செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸ் தரப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிய வருகிறது. (ம-03,18)


# Extension - Calling for Expression of Interest

## Removing Soil/Sand /Silt and Debris deposited in Tanks in Order to increase Water capacity if Irrigated tanks

Under the National Program of Village Irrigation Tanks rehabilitation "Wari Saubhagya", it is expected to rehabilitate 5000 small tanks/anicuts rapidly and initiatives are being taken to upgrade 1000 tanks/anicuts within the year 2021.

It is further expected to upgrade dilapidated tank bunds, sluices, spillways and canals, and to remove soil/sand/silt and debris deposited in tanks in identified quantities scientifically and methodically with a control in order to increase the water storage capacity of tanks.

As per the survey conducted under the program of 2021, it has been revealed that there is a possibility of using a large amount of the material removed from the small tanks as raw material for the industry and the government will be able to remove this material without cost while earning an additional revenue with the assistance of the private sector.

It has been decided to call for the Expression of Interest from the interested individual entrepreneurs to remove soil/sand/silt and organic debris deposited in tanks from which more than 5000 cubic meters proposed to be removed and to call for competitive bids from those who are registered and to allow the selected bidders for the removal of the above material in each tank giving maximum benefits to the Government.

Accordingly, the interested parties are requested to prepare and complete the following format given below and send the same to the following address before 25th of May 2021.

The receipt obtained by making payment of Rs.1000.00 as registration fee for each District to the nearest office of the Assistant/ Deputy Commissioner of Agrarian Development should be attached to the application submitted.

**Primary Conditions:-**

1. The above material should be obtained only from locations and levels shown by the Government Institution which is in charge of /responsible for reconstruction of the tank and the mix material should be removed from the tank without any selection.
2. Licenses applicable for transportation and value addition process should be obtained by the entrepreneur at his own expense.
3. The extent of excavation prescribed by the relevant Government Institution should not exceed under any circumstances. Only the approved machines should be used.
4. The entrepreneur shall agree to pay the Government the proposed amount for the quantity of material to be removed subject to the minimum price fixed for a unit by the Government.
5. Roads or other government properties damaged due to transportation of the above materials should be repaired and the entrepreneur shall agree to keep the security deposit determined by the government for the confirmation of the same.
6. In the development process of the rural tanks /anicuts, if valuable mineral resources (For instance -:Gems vein, metal deposits.. etc) or artefacts are found, the agent who is carrying out excavating activities should immediately inform the respective government institution in charge of the tank. The institution in charge of the tank should stop the excavating activities immediately and take necessary measures in that regard while informing the relevant authorized government body ( viz. Department of Archeology, National Gem and Jewellery Authority.. etc ) properly. Removal of the such high value mineral resources so discovered from excavating siteis a punishable offence.

Engineer D.D. Ariyarathna - Secretary
State Ministry of Tanks Reservoirs and
Irrigation Development related to Rural Paddy Fields, No.11, Jawatte Road,
Colombo 05.

**Application for the removal of Soil/Sand/Silt and organic Debris deposited in tanks in order to increase water capacity of irrigated tanks.**

1. Name of the Company or Entrepreneur
2. National Identity Card No./Registered No. of the Company
3. Address
4. Telephones- Fixed Fax- E-mail- Mobile -
5. Expected amount of material ( mixed volume) - Cubic Meter
6. Explain briefly the purpose of obtaining materials and the method of value addition
7. Name the District you are interested to obtain materials. (One or more as per your priority)
8. Signature of the Authorized person.
9. Date:

(C-2168)



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# இராமநாதன் நுண்கலைக்கழகம்
# பல்கலைக்கழக அனுமதி 2020/2021

## உளச்சார்பு பரீட்சை (Aptitude Test)

## நுண்கலைமாணி - கர்நாடக சங்கீதம்
## நுண்கலைமாணி - நடனம்
## நுண்கலைமாணி - சித்திரமும் வடிவமைப்பும்

மேற்படி நான்கு வருட பட்டப் படிப்புக் கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 28.05.2021 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகளும் தகைமைகளும்**

**அனுமதிக்கான தகைமைகள்**

கர்நாடக சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவுசெய்ய விரும்பும் பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது கர்நாடக சங்கீதம் அல்லது நடனம்-பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதரண தரச் சித்தியும் (S) பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

**தகுதிகாண் பரீட்சை ஆற்றுகை/ உளச்சார்பு பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை/உளச்சார்பு பரீட்சைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தோற்றுதல் வேண்டும்.

கர்நாடக சங்கீதம்/ நடனம்- பரதம் - ஆற்றுகை பரீட்சை

சித்திரமும் வடிவமைப்பும் - செய்முறை மற்றும் எழுத்துப் பரீட்சை

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளம் ஊடாக விண்ணப்பங்களை நிகழ்நிலையாக (online). 28.05.2021 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். **பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும், பரீட்சைக் கட்டணத்தினை மேற்கொண்ட பற்றுச் சீட்டினையும் விண்ணப்பத்துடன் இணைத்துக் கொள்ளுதல் அவசியமானது.**

பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தினை கையெழுத்திட்டு க.பொ.த உயர்தர பெறுபேற்று பத்திரத்தின் பிரதி மற்றும் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டினையும் விண்ணப்பத்துடன் இணைத்து **உதவிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பித்தல் வேண்டும்.

நுழைவு அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை/ நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அவர்களினால் வழங்கப்பட்ட மின்னஞ்சல் (e-mail) முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

கட்டணவிபரம்

| இல | கற்கைநெறி | மக்கள் வங்கிக் கணக்கிலக்கம் | விண்ணப்பக் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | கர்நாடக சங்கீதம் | 040002400001622 | 500.00 |
| 2 | நடனம் - பரதம் | 040002400001630 | 500.00 |
| 3 | சித்திரமும் வடிவமைப்பும் | 040002400001648 | 1300.00 |

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான கட்டணத்தினை ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில், மேற்குறிப்பிட்டவாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை கணக்கு இலக்கத்திற்கு செலுத்தி இருத்தல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: **தொலைபேசி எண்- 021 222 6714, மின்னஞ்சல் முகவரி - ar.admissions@yahoo.com** மூலம் தொடர்புகொள்ளமுடியும்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(C-2165)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் நாடு...

சில்வா அறிவித்துள்ளார்.

இதன்படி 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை 11 மணிமுதல் 25ஆம் திகதி செவ்வாய் அதிகாலை 4 மணி வரை பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்படும் எனவும்.

மீண்டும் அதேநாள் 25 ஆம் திகதி இரவு 11 மணிமுதல் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணி வரை தொடர்ந்தும் பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்படும்.

இதேவேளை நாளாந்தம் இரவு 11 மணி முதல் காலை 04 மணி வரை விதிக்கப்பட்ட இரவு நேர பயண கட்டுப்பாடுகள் தொடர்ந்து மே 31 வரை தொடரும்.

கடந்த வாரம் அமுல்படுத்தப்பட்டதைப் போலவே இந்த வார இறுதியிலும் நாடளாவிய ரீதியாக குறித்த கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ளது. (ம-3)

அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக, 2021.05.14,15,16ஆம் திகதிகளில் நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்த லொத்தர் சீட்டுகளுக்கான சீட்டிழுப்பு அன்றைய தினம் நடைபெறவில்லை. அதற்கான சீட்டிழுப்பு 2021.05.17ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 14.05.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2776
ஆங்கில எழுத்து: S — வெற்றி இலக்கங்கள்: 21 33 55 66
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய
திகதி - 2021.05.14
சீட்டிழுப்பு இலக்கம் - 518
ஆங்கில எழுத்து: O — வெற்றி இலக்கங்கள்: 20 26 37 61
NATIONAL LOTTERIES BOARD

### மஹஜன சம்பத
திகதி 2021/05/14
சீட்டிழுப்பு இலக்கம் 4481
ஆங்கில எழுத்து: C — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 2 0 6 2 8 1
தேசிய லொத்தர் சபை

### அத கோடிபதி (ADA KOTIPATHI)
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1279
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 16.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 133,884,495
வெற்றி இலக்கங்கள்: 27 28 55 70 — ஆங்கில எழுத்து: U
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 28,20,103/=
திகதி: 16.05.2021
வெற்றி வாரம்: 3160
வர்ணம்: ஊதா
வெற்றி இலக்கங்கள்: 35 39 46 60 — துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 17,440

### சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/05/14 — சீட்டிழுப்பு இலக்கம் 1598
சுப்பர் இலக்கம்: 05 — வெற்றி இலக்கங்கள்: 29 34 40 50
NATIONAL LOTTERIES BOARD

### சனிதா (Shanida)
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3609
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 16.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,899,201
வெற்றி இலக்கங்கள்: 10 11 49 50 — ஆங்கில எழுத்து: Q
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL — சுப்பர் போல
சீட்டிழுப்பு வாரம் 1453 — நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 16/05/2021 — தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: U 04 14 51 66
அடுத்த சுப்பர் ஜக்பொட் 56,086,891/=

### மெகா பவர்
திகதி 14/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0837
வெற்றி எழுத்து: M — சுப்பர் இலக்கம்: 04 — வெற்றி இலக்கங்கள்: 06 35 39 66

### ஜய (ஜயா)
சீட்டிழுப்பு வாரம் 076
சீட்டிழுப்பு திகதி 15.05.2021
வெற்றி இலக்கங்கள்: 04 23 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 13920
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### வஜிர
சீட்டிழுப்பு வாரம்: 726
வர்ணம்: மஞ்சள்
திகதி: 16.05.2021 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: H 10 27 50 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,614,615
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

### தன நிதானய
திகதி - 2021.05.13
சீட்டிழுப்பு இலக்கம் - 517
ஆங்கில எழுத்து: J — வெற்றி இலக்கங்கள்: 36 43 51 78
NATIONAL LOTTERIES BOARD

### அத கோடிபதி (ADA KOTIPATHI)
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1278
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 15.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 133,884,369
வெற்றி இலக்கங்கள்: 16 37 39 67 — ஆங்கில எழுத்து: C

### அத கோடிபதி (ADA KOTIPATHI)
கிழமை: வியாழன்
சீட்டிழுப்பு இல: 1276
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 13.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 133,874,633
வெற்றி இலக்கங்கள்: 38 39 70 74 — ஆங்கில எழுத்து: O

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 13.05.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2775
ஆங்கில எழுத்து: I — வெற்றி இலக்கங்கள்: 04 50 60 63
தேசிய லொத்தர் சபை

### சனிதா (Shanida)
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3608
சீட்டிழுப்பு திகதி: 15.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,898,885.80
வெற்றி இலக்கங்கள்: 07 09 18 57 — ஆங்கில எழுத்து: F

### சனிதா (Shanida)
கிழமை: வியாழன்
சீட்டிழுப்பு இல: 3606
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 13.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,886,866
வெற்றி இலக்கங்கள்: 10 23 30 75 — ஆங்கில எழுத்து: D

### மஹஜன சம்பத
திகதி 2021/05/13
சீட்டிழுப்பு இலக்கம் 4480
ஆங்கில எழுத்து: R — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 0 1 7 3 3 1
தேசிய லொத்தர் சபை

### ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 28,19,172/=
திகதி: 15.05.2021
வெற்றி வாரம்: 3159
வர்ணம்: இள நீலம்
வெற்றி இலக்கங்கள்: 07 50 55 58 — மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 182,020

### ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 2,804,800/=
திகதி: 13.05.2021
வெற்றி வாரம்: 3157
வர்ணம்: கபிலம்
வெற்றி இலக்கங்கள்: 05 08 17 37 — சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 68,49,100

### மெகா பவர்
திகதி 13/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0836
வெற்றி எழுத்து: P — சுப்பர் இலக்கம்: 03 — வெற்றி இலக்கங்கள்: 25 30 34 78

### SUPER BALL — சுப்பர் போல
சீட்டிழுப்பு வாரம் 1452 — நிறம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 15/05/2021 — தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: O 34 48 53 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் 56,086,311/=

### SUPER BALL — சுப்பர் போல
சீட்டிழுப்பு வாரம் 1450 — நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 13/05/2021 — தினம் வியாழன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: G 15 30 55 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் 56,072,109/=

### சேவன
திகதி 13/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 337
ஆங்கில எழுத்து: D — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 01 04 10 17
NATIONAL LOTTERIES BOARD

### சம்வர்தன வாசனாவ — உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 434 — திகதி 15.05.2021 — வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து: J — வெற்றி இலக்கங்கள்: 01 03 61 — விதி எண்: 7
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 13,040,424
தொ. பே.: 0112 333 546/47
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சம்வர்தன வாசனாவ — உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 433 — திகதி 13.05.2021 — வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து: C — வெற்றி இலக்கங்கள்: 06 38 58 — விதி எண்: 8
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 13,038,016
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்றம் ...

னருக்கு பொலிசார் அனுமதி அளிக்க மறுத்ததால் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளை தூண்டாத வகையிலும் சுகாதார நடைமுறைகளுக்கு கட்டுப்பட்டும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொள்ளலாம் என்று நீதிமன்றம் வழங்கிய கட்டளையின் பின்னர், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்துக்கு, சட்டத்தரணி தனஞ்சயன் மற்றும் முன்னாள் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், ஆண்டி ஐயா புவனேஸ்வரன் உள்ளிட்ட சிலர் சென்றிருந்தனர்

இதன்போது, குறித்த பகுதியில், பொலிஸார் குவிக்கப்பட்டு இருந்த நிலையில், அவ்விடத்துக்குள் செல்ல முடியாது எனத் தெரிவித்த பொலிஸார், அவர்களை தடுத்து நிறுத்தியுள்ளனர். (ம-03)


## காணி விற்பனை

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட ( யாழ். நகரில் இருந்து 11/2 Km தூரம் ) ஒட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கையில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( 2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.)

1 பரப்பின் விலை 6 இலட்சம்.

(6900)

077 288 0152
077 235 2656
074 075 4204

## காணி தேவை

அல்லைப்பிட்டியில் கடற்கரை யோரமாகக் காணி தேவை. விற்க விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.

(6892)

தொடர்பு இல.
077 711 5876

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 இல் பிறந்த சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

(6895)

தொடர்பு
076 663 7061

## வேலை வாய்ப்பு

வீட்டிலிருந்து கொண்டே உழைப்பதற்கு அரிய வாய்ப்பு
இணையத்தில் பதிவுகளை தரவேற்றம் செய்வதற்கு word press தெரிந்தவர்களும், விளம்பரப் பதாதைகளை வடிவமைப்பதற்கு photoshop தெரிந்தவர்களும் தேவை. (6892)

☎-077 711 5876

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி

(C-2133)

0768226240 DHL

அண்ணா EXPRESS
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 077 888 9388
(C-2134)
976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000/- பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும் (யாழ் மாவட்டம் முழுவதும்)


## மரண அறிவித்தல்

பிறப்பு 02 - 07 - 1952



இறப்பு 16 - 05 - 2021

### திரு. சுப்பையா சிவபாதலிங்கம் (ராசா)

திருநெல்வேலி, கம்பஸ் லேனைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுப்பையா சிவபாதலிங்கம் நேற்று முன்தினம் (16.05.2021) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - கனகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் சுந்தரலிங்கம், சிவனேஸ்வரி, சர்வேஸ்வரி, கணேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற ராஜேஸ்வரி, வாகீஸ்வரன் மற்றும் ஜெயா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(6891)

இல. 46, வளாக வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
021 222 2951
தகவல்:-
வா. சிவனேஸ்வரி (சகோதரி)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் கணக்கீடு பாட ஆசிரியை திருமதி கௌஷிதகி யசீதரனின் அன்புத் தந்தையார்

அமரர்

### சுப்பிரமணியம் சண்முகநாதன்

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/மல்லாகம் மகாவித்தியாலயம்


(6898)

## 189 ஆம் நாள் நினைவலைகளும் 22 ஆவது பிறந்தநாளும்

அமரர்

### லோகேஸ்வரன் பிரவீனன் (கபிலன்)

2018 ஆம் ஆண்டு உயர் தொழில்நுட்ப மாணவன், யா/வயாவிளான் மத்திய கல்லூரி



முல்லையும் மருதமும் பாலையும் நெய்தலும் கொண்ட ஒரு சிறிய கிராமமே புன்னாலைக்கட்டுவன். 11.11.2020 அன்று ஒரு புதன்கிழமை அன்றும் வழமைபோல் சேவலும் குயிலும் கூவ பட்சிகள் கூட்டம் ஓசை எழுப்ப காகமும் கரைய அணில்களும் சுத்தி தாவ சத்தம் இல்லாமல் காலையும் விடிந்தது. ஆனால் நேரம் மதியம் 1.00 மணியளவில் எங்கள் கூட்டில் இருந்த தம்பி கபிலன் திசை மாறி பறந்ததால் எங்கள் வீடு பாலைவனம் ஆனதே. 189 நாட்களுக்கு முன் நடந்ததே. அனால் இன்றுவரை எம் ஆன்மாவை உலுப்பிக் கொண்டே இருக்குது. இன்று உன்னை பெற்றவர்கள் கலங்கி தடுமாறி அந்த காலத்தை போக்க முடியாமல் வலியோடு வாழ்கின்றார்கள். தம்பி கபிலன் எங்கள் வீட்டுக்கு செல்ல குயில் வாடா தம்பி. எங்களை தாலாட்டும் தாயும் நீயே. அன்று நீ பார்த்து ரசித்த சூரியனும் சந்திரனும் ஏன் நட்சத்திரங்கள் கூட வந்துள்ளன. தம்பி கபிலன் நீ விட்டுச் சென்ற இடத்தில்தான் இன்னும் நின்றுகொண்டிருக்கின்றோம். தம்பி கபிலன் வரும் நாளைப் பார்த்தபடி இருக்கின்றோம். ஆனால் நினைவுகள் நீண்டுகொண்டே செல்கின்றன. அன்பைப்பொழிய ஆயிரம்பேர் இருந்தாலும் தம்பி கபிலனின் அன்போடு ஒப்பிட முடியாது தவிக்கின்றோம் உன்னை. பிரிந்து வந்து விடு தம்பி கபிலன். விதிகளை மீறி ஒருமுறைதான் வாழ்ந்து பார்ப்போம். அப்பா ஒரு கனவு கண்டேன் தம்பி. கபிலன் வரும் எனக் கண்டேன். என் செடியில் பூத்த முதல் பூவே... தம்பி கபிலன் நீ நட்ட மாமரமும் பூக்கவில்லையே... தம்பி வரட்டும் என்று சொல்லி காத்திருக்கின்றது... தம்பியின் நினைவுகளோடு வாழ்ந்து கொண்டிருப்போம்..

இருள் சூழ்ந்த அப்பாவின் வாழ்வில் ஒளிவீசுமா? இருள் சூழ்ந்த மேகங்கள் கலைந்து ஓடுமா? அப்பாவின் வாழ்வில் விடிவெள்ளி இனி பூக்குமா?

(6893)

பிறப்பு 18.05.1999

இறப்பு 11.11.2020

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி, தங்கைமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.